பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 18 ஞாயிற்றுக்கிழமை (05-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:311

## மடத்தடிச் சந்தி விபத்தின் எதிரொலி:

# பொலிஸார், இராணுவத்தினர் மீது நேற்றும் பொதுமக்கள் கல்வீச்சு!

### பதிலுக்கு படையினர் திட்டமிட்டு துரத்தித் துரத்தித் தாக்கினர்!!

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்5

**யாழ். பிரதான வீதியில் கன்னியர் மடம் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இராணுவ ட்ரக் மோதி இருவர் உயிரிழந்ததை அடுத்து சீற்றமடைந்த மக்கள் நேற்று அப்பகுதியிலும் கோண்டாவில் பகுதியிலும் படையினர் மற்றும் பொலிஸாருடன் மோதல்களில் ஈடுபட்டனர். கற்கள், போத்தல்கள் மற்றும் கையில் கிடைத்த பொருள்கள் எல்லாவற்றாலும் அவர்கள் படையினர் மீது தாக்குதல் நடத்தினர்.**

**பதிலுக்கு பொலிஸார் பொதுமக்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியதுடன் அவர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். இராணுவத்தினரும் பொதுமக்கள் மீது கல் வீசித் தாக்கியதுடன் கொட்டன்களாலும் விளாசினர்.**

பிரதான வீதியில் கன்னியர்மடம் சந்தியில் இராணுவ ட்ரக்குடன் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தமை தெரிந்ததே. இதனால் நேற்றுமுன்தினம் மாலையே இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே களேபரம் ஏற்பட்டு கல்வீச்சு, கண்ணீர்க் குண்டுத் தாக்குதல் என்பன இடம்பெற்றன.

இதன் தொடர்ச்சியாக கன்னியர் மடம் சந்தியிலும் கோண்டாவில் கிழக்கு சந்தி மற்றும் டிப்போச் சந்தி ஆகியவற்றிலும் நேற்றுக் காலையிலேயே கூடிய நூற்றுக்கணக்கானவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (16ஆம் பக்கம் பார்க்க)



பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தும் இளைஞர்கள்.

## சடலங்களையோ வாகனங்களையோ விபத்து நடந்த இடத்திலிருந்து அகற்றக்கூடாது

### இராணுவ பொலிஸாருக்கு நீதிவான் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.5

விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்று அதில் ஒருவர் உயிரிழந்தால் அந்தச் சடலத்தையோ, சம்பவத்துடன் தொடர்புடைய வாகனங்களையோ நீதிவான் பார்வையிட முன்னர் அப்புறப்படுத்தக்கூடாது.

- இப்படி இராணுவப் பொலிஸாருக்கு கண்டிப்பான உத்தரவு விடுத்துள்ளார் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

பிரதான வீதி, கன்னியர்மடச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துத் தொடர்பான மரணவிசாரணை அன்று இரவு யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது. அச்சமயம் அங்கு சமுகமளித்திருந்த இராணுவ மற்றும் இராணுவப் பொலிஸ் அதிகாரிகளுக்கே மேற்கண்ட அறிவுறுத்தலை நீதிவான் விடுத்தார்.

சம்பவம் நடந்த இருமணி நேரத்திற்குப் பின்னரே தனக்குத் தகவல் தரப்பட்டமைக்கும் நீதிவான் விசனம் தெரிவித்தார்.

ஒரு விபத்துச் சம்பவம் நடந்து சம்பவத்தில் ஒருவர் இறந்தால், உடனடியாக அதனை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும். விபத்தில் சிக்கியவர் படுகாயம் அடைந்திருந்தால், அவர் காயமடைந்து கிடந்த இடத்தில் அடையாளமிட்ட பின்னர் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்
(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர், பொலிஸாரின் அடாவடி போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல்

### கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி முறையீடு

யாழ். பிரதான வீதியில் இடம்பெற்ற இராணுவ கனரக வாகன - மோட்டார் சைக்கிள் விபத்தை அடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல்களாகும்.

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியை நேற்றுமாலை சந்தித்து இப்படி முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள இளம்பரிதி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளுக்கு அதுபற்றி விளக்கிக் கூறியுள்ளார்.

அவர் கண்காணிப்புக் குழுவினிடம் தெரிவித்த விடயங்கள் குறித்து அரசியல்துறையின் யாழ். மாவட்டத்தினர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இக்கோரமான விபத்துச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து இராணுவ கனரக வாகனத்தையும் இறந்த இருவரது
(16ஆம் பக்கம் பார்க்க)



மடத்தடிச் சந்தியில் நேற்று மறியலில் ஈடுபட்ட பொதுமக்களை அங்கிருந்து துரத்தித் துரத்தித் தாக்கிய படையினர் அருகிலிருந்த வீதிகளூடாகவும் சென்று பொதுமக்களைத் தாக்கினர். அவ்வாறு தாக்குதல் நடத்திய இராணுவத்தினரில் ஒரு சிப்பாய் வீடு ஒன்றின் மதில் மீது ஏறி, உள்ளே தாக்குவதற்கு யாராவது இருக்கிறார்களா எனக் கூர்ந்து அவதானிக்கிறார். *(படம் : தேவா)*

### மற்றைய சடலமும் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.பிரதான வீதியில் கன்னியர் மடச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றைய நபரின் சடலமும் நேற்று அடையாளம் காணப்பட்டது.

தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த முருகையன் ராஜ்குமார் (வயது 40) என்பவரே உயிரிழந்தவர் என அவரது
(16ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ அமைப்பின் உறுப்பினர் ஆரையம்பதியில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் ரெலோ அமைப்பின் மத்திய குழு உறுப்பினரான சீலன் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது 36) இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆரையம்பதி பொதுச்சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பணிபுரிபவரான இவர் கடமையில் இருந்த சமயமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சமாதானத்தை விரும்பாத தீயசக்திகள்தான் இச்செயலைச் செய்துள்ளன என்றும் -

இச்சம்பவம் தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்றும் -

ரெலோவின் மத்திய குழு உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இறந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். (ம-3-6-12)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிளர்ச்சியாளர்களுடன் உடன்படிக்கை; சூடானிய அரசு மக்களிடம் வாக்கெடுப்பு

லண்டன்,ஒக்.5

சூடானின் தென்பகுதிக் கிளர்ச்சியாளர்களுடன் சமாதான உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வது தொடர்பாக நாட்டு மக்களிடமே வாக்கெடுப்பொன்றை நடத்த அந்த நாட்டு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

கிளர்ச்சியாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கான மக்களின் சம்மதத்தைப் பெறுவதுடன் அந்நாட்டு அரசமைப்புச் சட்டத்தில் கிளர்ச்சியாளர்களுடன் பேசுவது தொடர்பாக உள்ள முரண்பட்ட சட்டங்களை மாற்றி அமைப்பதுமே இந்த வாக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம்.

உத்தேச உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது தொடர்பாக நாட்டு மக்கள் கருத்தை தெரிவிக்கும் வகையில் வாக்களிப்பதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் -

தற்போது பெறப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு, தென்பகுதி கிளர்ச்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்வதை மக்கள் விரும்புகின்றனரா என்பதை ஆராய்வதற்கே எனவும் - அந்நாட்டின் பிரதம நீதியரசர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ம-12)

# ஹெலி கடலில் வீழ்ந்து 8 இராணுவத்தினர் பலி!

## இந்தோனேஷியாவில் சம்பவம்

ஜகார்த்தா,ஒக்.5

இந்தோனேஷிய ஆசே மாகாணத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்ததில் எட்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

பறக்கும் ஹெலியிலிருந்து கயிற்றில் இறங்குவது போன்ற பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த சமயமே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கரையிலிருந்து 300 மைல் தொலைவில் கடலுக்குள் விழுந்த இராணுவ ஹெலியில் இருந்தவர்கள் கடலில் மூழ்கியே மரணமானதாக அந்நாட்டு இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வேகப்படகு மூலம் இவர்களைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிவடைந்ததாக அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ம-12-6)

# இஸ்ரேலிய நகரில் நேற்று தற்கொலைத் தாக்குதல்!

## 19 பேர் பலி; 50 பேருக்கு மேல் காயம்!!

இஸ்ரேலின் ஹைபா நகரில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50 பேர் வரையில் காயமடைந்தனர்.

பெண் தற்கொலையாளி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலீஸார் தெரிவித்தனர். தற்கொலையாளி உணவு விடுதிக்குள் நுழைந்த பின்னரே தன்னை வெடிக்க

குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற கட்டடம்



நகரின் வடக்குப் பகுதியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வைத்துள்ளார். இதனால் அந்தக் கட்டடமே முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஐந்து குழந்தைகள் உயிரிழந்தனர்.

கடற்கரையின் முன்புறமாக அமைந்திருந்த மக்ஸிம் என்ற அந்த உணவு விடுதி அரபு மற்றும் இஸ்ரேலியர்களுக்குச் சொந்தமானது.

இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பலஸ்தீன அமைப்பும் உரிமை கோரவில்லை.

செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதியும் ஜெருசலேம் மற்றும் டெல்அவிவ் பகுதிகளில் இடம்பெற்ற இரு தற்கொலைத் தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது தற்கொலைத் தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதல் குறித்து கருத்துத தெரிவித்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், தீவிரவாத அமைப்புக்களைக் கட்டுப்படுத்துவதில் பலஸ்தீன அதிகாரசபை பொறுப்புடன் செயற்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இந்தத் தாக்குதலை அடுத்து எழுந்துள்ள நிலைமைகளை ஆராய்வதற்காக அவர் தனது அமைச்சரவைக் கூட்டத்தை நேற்று அவசரமாகக் கூட்டினார்.

பலஸ்தீனப் பிரதமராகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ள அஹமட் ஹுரே இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளார். இது ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல் என்று அவர் தெரிவித்துள்ளார். பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதை



உயிரிழந்த ஒருவரின் கை

பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று அவரும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று ஹைபாவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்துள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். இத்தகைய தாக்குதல்களால் பலஸ்தீனர்களுக்கு உதவ வேண்டும் என்று தோன்றப்போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

## உலக அரங்கில்

### வித்தை காட்டியவரை கடித்துக் குதறியது வளர்ப்புப் புலி!

வாஷிங்டன்,ஒக்.5

அமெரிக்காவின் லாவோஸ் நகரில் மிருகங்களை வைத்து வித்தை காட்டும் நிபுணர் ஒருவரை அவரது வளர்ப்புப் புலி தாக்கியதில் குரல்வளை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த வெள்ளியன்று இரவு நிகழ்ச்சியில் பாதி முடிவடைந்த நிலையில் அந்த நிகழ்வில் பங்குபற்றிய புலி ஒன்று திடீர் என்று பாய்ந்து அவரது குரல் வளையைக் கடித்துள்ளது.

மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்ட அவர் சத்திர சிகிச்சையின் பின் உயிர் பிழைத்துள்ளார்.

தாக்கப்பட்டவர் ரோய் ஹோரான் என்னும் மிருக மந்திரவித்தை நிபுணர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரும் இவரது சகாவான சுவிச் பேகுச் பாக்கரும் கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்காவில் இத்தகைய மிருக மந்திரவித்தை மூலம் அதிசயிக்கத்தக்க சாதனைகளைப் புரிந்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-12-6)

# ஈராக்கில் கூட்டுப் படையினர் சூட்டு முன்னாள் இராணுவத்தினர் பலி!

பஸ்ரா,ஒக்.5

ஈராக்கில் முன்னாள் இராணுவத்தினருக்கும் கூட்டுப் படையினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலகத்தில் இரு ஈராக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தலைநகர் பக்தாத்தில் முன்னாள் இராணுவத்தினர் ஆயிரக்கணக்கானோர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அவர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் கலகம் ஏற்பட்டது. அப்போது ஈராக்கிய முன்னாள் படையினரில் ஒருவரை அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொன்றனர். மேலும் பலர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

ஈராக்கின் தெற்கில் உள்ள இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவிலும் முன்னாள் இராணுவத்தினர் இத்தகைய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அங்கு அவர்களுக்கும் பிரிட்டிஷ் படையினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டு கலகம் ஆரம்பமானது. பிரிட்டிஷ் படையினர் கலகத்தில் ஈடுபட்ட ஈராக்கிய முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை சுட்டுக்கொன்றனர்.

பக்தாத்தில் அமெரிக்க சிப்பாய் ஒருவர் ஆர்.பி.ஜி. தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரு நாளின் பின்னர் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஈராக்கை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஈராக்கிய இராணுவம் கலைக்கப்பட்டது. அதனால் அதில் இருந்த பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு வேலை இல்லாமல்போனது.

தற்போது அமெரிக்காவினால் அமைக்கப்பட்டுள்ள புதிய ஈராக்கிய இராணுவத்திலும் இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் உள்வாங்கப்படவில்லை. இதனால் அன்றாட வாழ்வுக்கே வழியற்ற நிலையில் தமக்கு வேலை தரவேண்டும் அல்லது மாதாந்தம் கொடுப்பனவு வழங்கவேண்டும் என்று கோரி அவர்கள் பரவலாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று பக்தாத்தின் பழைய இராணுவ விமான நிலையத்தின் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது முதலில் ஈராக்கிய முன்னாள் இராணுவ வீரர்கள் தமது படையினரை நோக்கிச் சுட்டதாலேயே தாம் திருப்பித் தாக்க வேண்டி வந்தது என்று அமெரிக்கப் படையினரின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் 25 பேர் காயமடைந்தனர். அதில் ஈராக்கியப் பொலீஸார் இருவரும் அடங்குவர்.

"நாங்கள் எமது பாட்டில் அமைதியாக எமது எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருந்தோம். ஆனால், அவர்கள்தான் (அமெரிக்கப் படையினர்) திடீரென எம்மைச் சீண்டி ஆத்திரப்படுத்தியதுடன் எங்களை நோக்கி சரமாரியாகச் சுட்டனர்" - என்று ஈராக்கிய முன்னாள் இராணுவத்தினர் ஒருவர் கூறினார்.

இந்தச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### சவூதியில் முதல் பெண் பீடாதிபதி

சவூதி அரேபியாவில் உள்ள பல கலைக்கழகம் ஒன்றில் பெண் ஒருவர் முதந்தடவையாக பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகா அப்துல்லா அக்கபி என்ற பெண்ணே இவ்வாறு பல்கலைக்கழகப் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவராவார்.

பழைமைவாதப் போக்குடைய சவூதிஅரேபியாவில் முதன் முதலாகப் பெண் ஒருவர் இவ்வாறு பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளமையைப் பல மேற்குலக நாடுகள் வரவேற்றுள்ளன.

உலக நாடுகளில் பெண்களின் சேவை உயர்நிலை அடைந்திருப்பதை சவூதி அரேபியாவும் உணர்ந்துள்ளது. பெண்களின் அறிவும் தமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவை என்பதாலேயே இந்த முன்னோடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ம-12-6)



ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ராவில் போராட்டம் நடத்திய முன்னாள் இராணுவ வீரர்களுக்கு காவலாக நிற்கும் பிரிட்டிஷ் படை வீரர் ஒருவர்.

## மேற்குக்கரையில் 600 வீடுகள் அமைக்கும்

# இஸ்ரேலின் குடியேற்றத் திட்டம்; அமெரிக்கா கடும் கண்டனம்

ஜெருசலேம்,ஒக்.5

மேற்குக்கரை நகரங்களில் 600 வீடுகளை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தினை அமெரிக்கா கண்டித்துள்ளது.

இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் எனக் கருதி ஏற்கனவே பலஸ்தீனப் பகுதிகளில் அமைக்கப்பட்ட இஸ்ரேலியக் குடியேற்றங்களால் மேலும் குழப்பங்களே ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீண்டும் இஸ்ரேல் இவ்வாறு குடியேற்றங்களை அமைப்பது மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்குமென அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் வெஸ்ரின் வோக்கர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தினை சர்வதேச சமூகமும், பலஸ்தீன அதிகாரசபையும் கண்டித்துள்ளன.

(ம-12)

# ஆந்திர முதல்வர் மீதான தாக்குதலுக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் உரிமை கோரினர்

புதுடில்லி,ஒக்.5

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைக் கொல்வதற்கான குண்டுத்தாக்குதலை மேற்கொண்டது தாங்கள்தான் என அந்த மாநிலத்தின் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

தமது இயக்கத்தின் பல உறுப்பினர்களை அரசபடைகள் கொன்றமைக்கு பழிதீர்க்கும் முகமாகவே இத்தாக்குதலைத் தாம் நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் அந்த மாநிலத்தின் முக்கிய அமைச்சர்கள் இருவரும் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மற்றும் மூவர் காயமடைந்ததுடன் முதலமைச்சர் பயணித்த குண்டுதுளைக்காத காரும் சேதமடைந்திருந்தமை தெரிந்ததே.

(ம-12-6)

# விபத்தில் இரு நபர்கள் பலியானதன் எதிரொலி மடத்தடிச் சந்தியில் நேற்றும் பெரும் களேபரம்

## கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச்சூடு தாராளம் பொதுமக்கள்-படையினர் பரஸ்பரம் கல்வீச்சு

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.பிரதான வீதியில் மடத்தடிச் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தின் எதிரொலியாக நேற்று அந்தப் பகுதிகளில் பொதுமக்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்களுக்கும் பொலீஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன. இரு பகுதியினரும் கல்வீச்சில் ஈடுபட்டனர். அந்தப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றநிலை காணப்படுகின்றது.



வீதியின் குறுக்கே போட்டு எரிக்கப்பட்ட டயரை அணைக்கும் முயற்சியில் படையினர்...

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தை அடுத்து, அந்தப் பகுதியில் உள்ள படையினரின் காவலரணை அகற்றுமாறு கோரி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பிரதான வீதியில் தடைகளை ஏற்படுத்தி போக்குவரத்தைத் தடை செய்தனர்.

போத்தல்கள், கற்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் கையில் கிடைத்த பொருள்கள் சகிதம் பொலீஸார் மற்றும் இராணுவத்தினரும் பொதுமக்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர். இதனால் அப்பகுதி வீதிகள் போர்க்களமாகக் காட்சியளித்தன.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் இராணுவ ட்ரக்குடன் ஏற்பட்ட விபத்தினால் நேற்றுமுன்தினம் அந்த இடத்திலேயே பலியாகினர். இதனால் கடுங்கோபமுற்ற அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் இரவே பொலீஸார் மற்றும் இராணுவத்தினருடன் மோதலில் ஈடுபட்டனர் என்பது தெரிந்ததே.

இதன் தொடர்ச்சியாக நேற்றுக் காலை 6 மணியளவில் விபத்து நடைபெற்ற இடத்தில் கூடிய பொதுமக்கள் பிரதான வீதியூடான போக்குவரத்தை முற்றாகத் தடைசெய்தனர். போக்குவரத்து நடைபெறாதிருப்பதற்காக யாழ் பிரதான வீதியிலும் ஏனைய வீதிகளிலும் ஆங்காங்கே வீதித்தடைகள் போடப்பட்டிருந்தன.

இதன்பின் அங்கு திரண்டிருந்த பெருமளவு இளைஞர்கள் மடத்தடிச் சந்தியில் உள்ள இராணுவக் காவலரணை உடனடியாக அகற்றுமாறு கோரி மறியற்போரில் ஈடுபட்டனர். இதனால் அங்கு கடமையில் இருந்த பொலீஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் இளைஞர்களுக்குமிடையே முறுகலநிலை தோன்றியது.

இளைஞர்கள் பிரதான வீதியின் குறுக்காக ரயர்களைப் போட்டு எரித்தனர். பொலீஸாருடன் கடுமையான வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

அந்தச் சமயத்தில், விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிடுவதற்காக யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வந்தார்; விசாரணைகளை மேற்கொண்டார். விபத்து நடந்த இடம் தொடர்பாக பொலீஸார் பிழையான இடங்களைக் காண்பிப்பதாக அங்கு திரண்டிருந்த இளைஞர்கள் நீதிவானிடம் முறையிட்டனர். தான் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மேலதிக நீதிவான் இளைஞர்களிடம் கோரியதையடுத்து அவர்கள் அமைதியைக் கடைப்பிடித்தனர்.

நீதிவான் தனது விசாரணைகளை முடித்து அவ்விடத்தில் இருந்து கிளம்பியதும் அங்குகூடியிருந்த இளைஞ்கள மடத்தடியில் உள்ள இராணுவக் காவலரணை உடனடியாக அகற்றுமாறு பெரும் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலீஸார் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே அங்கிருந்த இராணுவத்தினர் அனைவரையும் காவலரணிலிருந்து அகற்றுமாறு இளைஞர்கள் பொலீஸாரிடம் கோரினார்கள். அதற்கும் பொலீஸார் மறுத்தனர்.

சம்பவ இடத்திற்கு கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் இருவரும் புலிகள் தரப்புக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி அருட்திரு. ஞானரட்ணம் அடிகளும் கூட வந்திருந்தனர். கண்காணிப்புககுழு அதிகாரி ஒருவர் அந்த இராணுவக் காவலரணை அகற்றுவது தொடர்பாக அங்கு நின்றவாறு இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசினார். பின்னர் காவலரணை அகற்ற படைத்தலைமை மறுப்புத் தெரிவிப்பதாக அங்கு கூடிநின்ற இளைஞர்களிடம் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். இராணுவக் காவலரண் அகற்றப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என இளைஞ்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

இராணுவக்காவலரணை அகற்றாவிட்டால் இப்போராட்டத்தை கட்டுபடுத்த முடியாதென விடுதலைப் புலிகளின கண்காணிபபுக்குழு பிரதிநிதி



சம்பவ [illegible] நீதிவான் [illegible]மதி) விசாரணை.

வணபிதா ஞானரட்ணம் அடிகளாரும் சர்வதேச கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்தார். இது தொடர்பாக தாம் எதுவித நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலையில் இருக்கின்றோம் என்று கண்காணிப்புக குழுவினர் அப்போது தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு நிலைமை மேலும் மோசமடைந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது எந்தநேரமும் தாக்குதல் நடத்தக்கூடிய தயார்நிலையில் இராணுவத்தினரும் பொலீஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களும போத்தல்கள், பொல்லுகள், கற்கள் சகிதம் தயார் நிலையில் நின்றனர். சம்பவ இடத்திற்கு வாகனங்களில் இராணுவத்தினரும், பொலீஸாரும் மேலதிகமாக கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

பிரதான வீதியில் சாள்ஸ் மகாவித்தியாலயப் பக்கமாக நின்று போராட்டததில் ஈடுபட்ட இளைஞர்கள் இராணுவக்காவலரணைத் தாண்டி யாழ் நகரப்பக்கமாக முன்னேற முற்பட்ட வேளை - காலை 11 மணியளவில் - இருதரப்புக்கும் இடையே திடீரென மோதல் வெடித்தது.

தயாரான நிலையில் இருந்த இரு தரப்பும் கற்கள், பொல்லுகளை வீசி சரமாரியாக மோதிக்கொண்டன. கண்காணிப்புக்குழுவினர் பார்த்திருக்க இராணுவத்தினர் மற்றும் பொலீஸார் இளைஞர்களை நோக்கி கடுமையான கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதுடன் கற்கள் மற்றும் பொல்லுகளை வீசித்தாக்கினார்கள்.

பதிலுக்குத் தாக்கத் தொடங்கிய இளைஞர்கள் போத்தல்களினால் பொழிந்து தள்ளினார்கள். இளைஞர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினரும், பொலீஸாரும் சற்றுப் பின்வாங்கினர். மீண்டும் உஷாரடைந்து இளைஞர்களைக் கலைத்துக் கலைத்து கண்ணீர்ப்புகைக் குண்டினாலும், கற்களினாலும் கண்டபடி தாக்கினார்கள்

கண்ணீர்ப்புகைக்குண்டு அளவுக்கதிகமாகப் பிரயோகிக்கப்பட்டமையினால் சில மணிநேரம் அப்பகுதி எங்கும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது. வீடுகளில் இருந்தவர்கள் தமது பிள்ளைகளை காப்பாற்றும் பொருட்டு அங்கிருந்து வெளியேறினர். உள்ளே இருந்தவர்கள் வீட்டுக்கதவுகளையும், யன்னல்களையும் பூட்டிக்கொண்டனர்.

நேரம் செல்லச் செல்ல மோதல் உச்சக்கட்டத்தையடைந்தது. இளைஞர்கள கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சுக்கு மத்தியிலும நின்று கடுமையான எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

ஒரு கட்டத்தில் இரு தரப்பினரும் மிகக் குறுகிய இடைவெளியில் நின்று தாக்குதலில் ஈடுபட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

இளைஞர்கள் தாக்குதலை நிறுத்தாமையினால் மேலும் ஆத்திரமடைந்த இராணுவத்தினரும் பொலீஸாரும் தம மனம் போன போக்கிலெல்லாம் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியதுடன் ஆகாயத்தை நோக்கிச் சரமாரியாக வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இதனால் அங்கு நின்ற இளைஞர்களும் பொதுமக்களும் சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் அப்படியே விட்டு விட்டு கலைந்து ஓடினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சென் சாள்ஸ் மகாவித்தியாலயம் வரை முன்னேறிய பொலீஸாரும் படையினரும் அப்பகுதியில் நின்ற பொதுமக்களைத் தடிகளால தாக்கினார்கள்.

பொலீஸாரும், இராணுவத்தினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் விலகிச் சென்றனர்.

இளைஞ்களின் தாக்குதல் குறையவே படையினர் நண்பகல் 1 மணியளவில் அப்பாதையூடான போக்குவரத்தைச் சீராக்கினர். (ம-8-ரி-15-51-86-88-139)

# கோண்டாவில் பகுதியிலும் நேற்று பொதுமக்கள் மறியல்

## பொலீஸாரின் தாக்குதலில் நால்வர் காயம்

இணுவில்,ஒக்.5

யாழ். பிரதான வீதி, மடத்தடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தின் எதிரொலியாக இராணுவத்தின் பிரதான விநியோகப் பாதையான பலாலி வீதியின கோண்டாவில் பகுதியில் நேற்று பொதுமக்கள் வீதித் தடைகளைப் போட்டு மறியல் போராட்டத்தில ஈடுபட்டனர்.



வீதியின் குறுக்கே கற்களை அடுக்கி மறியல்...

விபத்தில் உயிரிழந்த இளைஞன் ஒருவன் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவரானபடியால் அப்பகுதி மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

பலாலி வீதியில் கிழக்குக் கோண்டாவில் சந்தியிலும் கோண்டாவில் பஸ் டிப்போ சந்தியிலும் நேற்றுக்காலை முதல் ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான மக்கள் வீதிக்குக் குறுக்காக ரயர்களைப் போட்டுக் கொளுத்தியதுடன் மரக்குற்றிகள் மற்றும் இரும்புக் கேடர்கள், கற்கள் போன்றவற்றையும் வீதியின் குறுக்கே போட்டு தடைகளை ஏற்படுத்தியதுடன் மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் காலை முதல் பலாலி வீதியால் இராணுவ வாகனங்கள் உட்பட எந்த வாகனங்களும் செல்லவில்லை. முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில் டிப்போவுக்கு அருகில் பெருமளவு பொலீஸாரும படையினரும் குவிக்கப்பட்டனர். அதனையடுத்து அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலீஸார கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். ரப்பர் குண்டுகளையும் சுட்டனர்.

இதனால், மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். ஓடிய மக்களை பொலீஸாரும் படையினரும் துரத்தித் துரத்தி கொட்டன்களால் தாக்கினர்.

இந்த அமளி அடங்கிய சிறிது நேரத்தில் மக்கள் மீண்டும் வீதிக்கு வந்து மறியலில் ஈடுபட்டனர்.

விபத்தில் உயிரிழந்த இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சோக கீதம் இசைப்பதற்கென கோண்டாவில் டிப்போ சந்தியில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி சாதனங்களையும் பொலீஸார விட்டுவைக்கவில்லை. ஒலிபெருக்கி சாதனங்களை அடித்துச் சேதப்படுத்திய பொலீஸார் அவற்றை எடுத்துச் சென்றனர்.

இதனையடுத்து அங்கு நிலைமை மேலும் மோசமடைந்தது. சம்பவத்தை கேள்வியுற்று நண்பகல் 12.30 மணியளவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் அப்பகுதிக்கு வந்தனர்.

மறியலபோராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கும் இராணுவத்தினர் மற்றும் பொலீஸாருக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த அவர்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அவர்களது முயற்சி பலிக்கவில்லை. அடித்துச் சேதமாக்கி பறிமுதல் செய்யப்பட்ட ஒலிபெருக்கி சாதனங்களை நல் ) நிலையில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று மறியல் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விவகாரத்தில் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் தலையிட்டு பொலீஸ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவற்றை மீளப்பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சம்பவ இடத்துக்கு வந்து பொலீஸ் மற்றும் இராணுவத் தரப்பினருடனும் பொதுமக்களுடனும் பேசி சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

காலையில் மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலீஸாரும் படையினரும் மேற்கொண்ட கண்மூடித்தனமான ரப்பர்க் குண்டுத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர்.

தி.உதயகுமார் (வயது-27), த.தஜிதரன் (வயது-19) ஜெ.பவிதரன் (வயது-19), ச.ஜுட்சன் (வயது-26) ஆகியோரே காயமடைந்தனர்.

நேற்றைய மறியல் போராட்டத்தினால் கோண்டாவில் கிழக்குச் சந்தி, டிப்போ சந்திப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை.

மாலை 4 மணிவரை மறியல் போராட்டம் தொடர்ந்தது. பொலீஸார் மற்றும் படையினரும் அதுவரை குண்டாந் தடிகளுடனும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுடனும் அப்பகுதியில் திரண்டிருந்தனர்.

பிற்பகல் 4 மணியளவில் போராட்டம கைவிடப்பட்டதை அடுத்து அந்தப் பாதை ஊடான போக்குவரத்துகள் சீராகின. (ம-4-15-86-49)

# குடாநாட்டின் நன்னீர் வளம் மாசுறுவதை உடன் தடுக்குக!

## உள்ளூராட்சி செயலர்களிடம் அறிவுறுத்து

தெல்லிப்பழை,ஒக்.5

குடாநாட்டின் நன்னீர் வளம் மாசு படுவதைத் தடுக்க உள்ளூராட்சி சபை அதிகாரிகள் உடன் தகுந்த சட்ட நடவடிக்கைகளையும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுப்பது மிகவும் அவசியம்.

- இவ்வாறு உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தால் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் அனுசரணையுடன் 'பௌதிக திட்டமிடலும் விழிப்புணர்வும்' என்ற தொனிப் பொருளில் இந்தக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

குடாநாட்டு நன்னீர்வளம் மாசடைவதைத் தடுப்பது தொடர்பாக இந்தக்கருத்தரங்கில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குடாநாட்டின் நன்னீரோட்டமானது மண் மேற்பரப்பிலிருந்து மிகச் சமீபமான தூரத்திலேயே அமைந்துள்ளது. சுமார் 15 முதல் 30 அடி ஆழமான கிணறுகளிலிருந்தே நன்னீரைப் பெற முடியும். இதற்குச் சமாந்தரமான ஆழத்திலேயே மலசலகூட குழிகளும் வெட்டப்படுகின்றன. இக்குழிகளில் அமைக்கப்படும் தடுப்புச் சுவர்கள் பல மானவையாகவும் சிறப்பான கலவைகளாலும் ஆக்கப்படாது போனால், காலப்போக்கில் இந்த சுவர்களினூடாக அசுத்த நீர் கசிந்து நன்னீர் ஓட்டத்துடன் கலக்க வாய்ப்புள்ளது.

அதேபோல, குழாய்க்கிணறுகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் அமுக்க மற்றும் இழு விசைகளால், குடாநாட்டு பாறைப்படையின் கீழ் ஆழத்திலுள்ள உவர் நீர் மேற்படைக்கு கொண்டுவரப்பட்டு நன்னீரோடு கலப்பதால் நன்னீர் உவர் நீராகும் அபாயமுள்ளது.

எனவே, பிரதேச சபை நிர்வாகிகள், அதிகாரிகள் பொதுமக்களது கட்டுமானப் பணிகளை சிறப்பாக கண்காணிக்கவேண்டும். மலசல கூடங்கள் உரிய முறையில் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்தியே கட்டட அமைப்புக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

நாட்டின் எதிர்கால அபிவிருத்தியைத் தூரநோக்குடன் சிந்தித்து வீதிகளுக்கு அருகாக அமைக்கப்படும் கட்டடங்களை வீதி அபிவிருத்திக்கு இடையூறு தராத வகையில் அமைக்க அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும்.

வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நன்மைக்காக பல்வேறு வீட்டுத்திட்டங்கள், கட்டுமானப்பணிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. ஆனால், இப்பணிகளும், திட்டங்களும் திட்ட வரைபுக் கேற்பவே அமைக்கப்படுகின்றனவே அன்றி, நாட்டின் கட்டட நிர்மாண, சுகாதார சட்டதிட்டங்களுக்கு அமைவாக அமைக்கப்படவில்லை.

எனவே, பிரதேச சபையினர் இவ் விடயங்களையும் உரிய முறையில் அணுகி இத்திட்டங்களும் இயன்றளவு நாட்டின் கட்டட அமைப்பு சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடைமுறைப் படுத்தப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-150)

# கைதடி முதியோர் இல்லத்தின் ஆண்டு விழாவும் நூல்வெளியீடும்

## செவ்வாயன்று நடைபெறும்

தென்மராட்சி,ஒக்.5

கைதடி 'அரச முதியோர் இல்லத்தின் 50 ஆவது ஆண்டு விழாவும், முதியோர் தின விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலையும், மாலையும் கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

மாகாண சமூக நலத்துறை திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர். ரஞ்சினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவும், கௌரவ விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், மாகாண புனர்வாழ்வு சமூக நலத்துறை திணைக்கள மேலதிக செயலாளர் கே.மகாலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும் கலந்துகொள்வர்.

'ஐம்பதாம் ஆண்டில் முதியோர் இல்லம்' என்னும் சிறப்பு மலரும் இந்த விழாவில் வெளியிடப்படவுள்ளது. இந்த சிறப்பு மலருக்கான ஆய்வுரையினை கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) நிகழ்த்துவார்.

முதியோர் வாரத்தையொட்டி இல்ல முதியோரிடையே நடத்தப்பட்ட விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இந்த விழாவில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-117)

# பாடசாலைகளில் மாணவர் வரவு வீழ்ச்சியடைந்து செல்கின்றது

## பரிசளிப்பு விழாவில் கல்விப் பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம்,ஒக்.5

பாடசாலைகளில் பொதுவாகவே மாணவர்களின் நாளாந்த வரவு வீழ்ச்சியடைந்து செல்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன்.

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிறுவுநர்தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி சி.விசுவலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

ஒரு மாணவர் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதன் மூலம்தான் கல்வியில் மட்டுமல்லாது ஒழுக்கம், பண்பு மற்றும் ஏனைய துறை சார்ந்த ஆற்றல்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ளமுடியும். அதன் மூலமே ஓர் ஒழுக்கமான சிறந்த சமுதாயத்தை கட்டி எழுப்பமுடியும். எனவே, மாணவர்களாகிய நீங்கள் 'கல்வியில் கூடிய கவனம் எடுக்கவேண்டிய நிலையில் உள்ளீர்கள். இந்த நிலையை பெற்றோரும் உணர்ந்து செயற்படவேண்டும். இன்று எந்த ஒரு மாணவனுககும் வறுமை கல்விக்கு ஒரு தடையாக இருக்கமுடியாத நிலையே உள்ளது. வறுமையால் கல்வியைத் தொடராத மாணவர்களுக்கு உதவ எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்களும், அரசும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எனவே, வசதிகள் கிடைக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மாணவர்கள் ஆசிரியர்களிடம் இருந்து கற்க வேண்டியவற்றை கற்றுக்கொள்ளுங்கள். ஆசிரியர்களும் எதிர் காலத்தில் சிறந்த ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்க உழைக்கவேண்டும். செங்குந்த இந்துக் கல்லூரி எத்தனையோ அறிஞர்களை உருவாக்கியுள்ளது. அதுபோல் நீங்களும் திகழவேண்டும் - என்றார் .

யாழ். மாவட்ட கல்விமேம்பாட்டு பேரவைப் பொறுப்பாளர் கை.கவியன்பன் தனதுரையில் -

ஏ - 9 பாதை திறக்கப்பட்டதன் பின் எமது மண்ணின் பண்பாட்டைச் சீர்குலைக்கப் பலவிதமான பொருள்கள் பல வடிவில் வந்துள்ளன. மாணவர்களாகிய நீங்கள் இது விடயத்தில் விழிப்பாக இருக்கவேண்டும்.

தமிழரின் தமிழ்ப் பண்பாட்டை சீர்குலைக்க பலவடிவங்களில் சில தீய சக்திகள் முனைகின்றன. மாணவர் சமூகம் இலக்காகிவிடக் கூடாது.

மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடையும் நிலையே இங்கு காணப்படுகின்றது. எனவே, மாணவர்கள் கடும் முயற்சி எடுத்து கல்வியைத் தொடரவேண்டும். ஆசிரியர்களும் தேசப்பற்றுள்ள, அறிவு, பண்பு ரீதியான ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்க முன்வரவேண்டும் - என்றார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் அமரர் பேராசிரியர் ச.முத்துலிங்கம் ஞாபகார்த்த பேருரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.சின்னத்தம்பி வழங்கினார். இறுதியில் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ஜ-180)

## ஊர்காவற்றுறை பகுதிக்கான

# குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது

ஊர்காவற்றுறை,ஒக்.5

அல்லைப்பிட்டியில் உள்ள இயந்திரம் பழுதடைந்துள்ளதால் அது சீராக்கப்படும்வரை ஊர்காவற்றுறைப் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஊர்காவற்றுறை மேற்குத்தெரு வீதி, முகாம் வீதி, சென். மேரிஸ் வீதி ஆகிய பகுதிகளுக்கு காலையும், மண்குளி வீதி, ஐந்தாம் புல வீதி ஆகிய பகுதிகளுக்கு மாலை வேளையும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்பொழுது பழுதடைந்த இயந்திரத்திற்குப் பதிலாக வலுக்குறைந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் இதனால் ஊர்காவற்றுறையில் உள்ள நீர்த்தாங்கிக்கு நீரைச்செலுத்தி அதன்மூலம் கூடியவிசையுடன் நீர் விநியோகத்தை மேற்கொள்ளமுடியாதுள்ளதாகவும் -

இதனால், அல்லைப்பிட்டியில் இருந்து நேரடியாக குறைந்த உந்துவிசையுடன் வரும் நீர் மேற்படி பகுதிகளுக்கு காலை, மாலை நேரடியாக விநியோகிக்கப்பட்டுவருகிறது.

அதேவேளை - மேட்டு நில பகுதிகளுக்கான விநியோகம் நீரின் உந்துவிசை குறைவாக இருப்பதனால் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - நிலைமை சீராக்கப்படும் வரை பொதுமக்கள் குடிதண்ணீரை சிக்கனமாகப் பேணுமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-16)

## சித்திரப் போட்டி

தென்மராட்சி,ஒக்.5

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

'நாளைய உலகம் சமாதானமாக மலரட்டும்' என்னும் பொருளில் இந்த சித்திரப் போட்டி நடத்தவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் அறிவித்துள்ளார். (எ-117)

## முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

வலி.தென்மேற்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும், 25 வருட சேவையாற்றி வெள்ளி விழாக் காணும் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பொதுச்சேவைப் பங்காளர் எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.செல்வராஜாவும், கௌரவ விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராஜ், வடக்கு - கிழக்கு மாகாண முன்பிள்ளைப் பருவ திட்டமிடல் பணிப்பாளர் கா. கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-10)

# சக்தி இல்லையேல் உலக இயக்கம் இல்லை

நவராத்திரி விழா சக்தி வழிபாட்டை முதன்மைப்படுத்தும் விழா ஆகும். சக்தி என்றால் என்ன? வேலை செய்யும் ஆற்றல் ஆகும். மின்குமிழிலிருந்து ஒளி காலுவதைக் காண்கிறோம். மின் விசிறி மோட்டார் சுழலுவதைக் காண்கிறோம். குளிர்சாதனப் பெட்டியில் குளிர் வெளிப்படுதலை உணருகின்றோம். இவை எல்லாம் மின்சாரத்தின் வெளிப்பாடுகளாகும். மின்சாரத்தை நாம் காணமுடியவில்லை. ஆனால், அவற்றினது வெளிப்பாடுகளையே காணமுடிகிறது. இதேபோன்றுதான் சக்தியைக் காண முடியாது. எனினும், சக்தியினது வெளிப்பாட்டையே இப்பிரபஞ்சம் முழுவதும் காண்கிறோம். சக்தி இல்லையேல் உலக இயக்கம் இல்லை.

வழிபாடு என்றால் என்ன? போற்றுதலும் ஆழமாக நினைத்தலுமாகும். 'யத்பாவம் தத்பவதி' என்று வேதம் கூறுகிறது. எதை எண்ணுகிறாயோ அதுவாவாய்' இதையே வள்ளுவரும் *எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்* என்று கூறுகிறார். எண்ணியர்திண்ணியராகப் பெறுவதற்கே வழிபாடாகும்.

தாய் என்பது பெண் உடம்பைக் குறிப்பதல்ல. சூக்குமமாக கண்ணுக்குத் தெரியாதிருக்கும் தாய்மையைக் குறிப்பதாகும். பிறந்த குழந்தைக்குத் தனது தேவையையே தெரியாத போது பால் நினைந்து ஊட்டிப் பேணிப் பாதுகாக்கும் உயர்ந்த தன்மையே தாய்மை. இது தெய்வீகத்தின் வெளிப்பாடாகும். ஏனவேதான், சக்தி வழிபாட்டைத் தாய் உருவத்தினூடாக வழிபாடு இயற்றப்படுகிறது. தீமைகளை அழிக்கும் பொழுது துர்க்கையாகவும், தெய்வீக சம்பத்துக்களை, ஆன்மீக செல்வங்களை வழங்கும்பொழுது இலக்குமியாக



வும், ஞானத்தை வழங்கும்போது சரஸ்வதியாகவும் வழிபாடு இயற்றப் படுகிறது.

உயர்ந்த பாவனை, ஆழமான எண்ணம் இல்லாத கிரியைகள் வழிபாடு ஆகமாட்டாது. அது உயிரில்லா உடம்பிற்கு ஒத்ததாகும். உலக இயக்கத்தில் மூன்று நிலைகளை நாம் அவதானிக்கமுடியும். ஒன்று சாத்வீக நிலை. மற்றையது இராட்சத நிலை. அடுத்தது தாமஸ நிலையாகும். பசுவினுடைய சாந்தமான தன்மையும் தென்றல் காற்றினுடைய இதமான தன்மையும் சாத்வீக நிலையை புரிந்து கொள்ள உதவும். புலி, சிங்கம், கரடி ஆகியவற்றுடைய விறுவிறுப்பான தன்மையும் சூறாவளியினுடைய வேகமான தன்மையும், உடலின்பம் துய்ப்பதற்காக 24 மணிநேரமும் இடையறாது வேலை செய்யும் நிலையும் இராட்சத தன்மையைப் புரிந்து கொள்ள உதவும். இதேபோல் எருமை மாட்டினுடைய அஸமந்தப் போக்கும், சோம்பேறியினுடைய சோம்பல் தன்மையும் தாமஸ குணத்தைப் புரிந்துகொள்ள உதவும்.

மனித வாழ்வில் துன்பத்திற்கு காரணமாக இருப்பது அறியாமையே. எம்மிடையே அறியாமையேற்றபட்டதற்குக் காரணம், எம்மிடத்தேயுள்ள குறைபாடுடைய ஐம்பொறிகளே. புலனுறுப்புக்களே பிழையான கருவிகளைக் கொண்டு அளவிடப்படும் அளவீடுகளும் பிழையானவைகளாகவே அமையும். பூமியைவிட பன்மடங்கு பெரிய சூரியனை எமது கண் ஒரு பந்தம் போன்று ஒரு சிறிய பொருளாகவே காட்டுகிறதை நாம் அறிவோம். பொறி புலன் வழியே செல்பவர் எவரும் அறியாமை என்ற இருளுக்குள் அகப்பட்டோயாகவேண்டியிருக்கும். மனிதப் பிறப்பினது நோக்கம் பிறவித்துன்பத்திலிருந்து விடுபடுவதே. பிறவித்துன்பத்திலிருந்து விடுபட அஞ்ஞானத்திலிருந்து நீங்கியேயாகவேண்டும். அஞ்ஞானத்திலிருந்து நீங்க மூன்று கட்டங்களில் நாங்கள் இயங்கவேண்டியிருக்கிறது. ஒன்று நாம் விழிப்பாக இல்லாத போது எம்முள்ளேபுகுந்து எம்மைத் தீய வழிகளில் இட்டுச்சென்று துன்பத்திலாழ்த்திக்கொண்டிருக்கும் அசுரத்தனங்களை வெளியேற்றுவதற்குப் போராட வலிமையை, சக்தியைப் பெற, எல்லாத் தீமைகளையும் அழிக்க வல்ல துர்க்கைக்கு நவராத்திரி தின முதன் மூன்று நாளும் வழிபாடு ஆற்றப்படுகிறது. அவ்வாறு அசுரத்தனங்களை வெளியேற்றியபின் மீண்டும் அவை எம்முள்ளத்தில் குடிகொள்ளாமலிருக்க ஆன்மீக செல்வங்களால் எம்முள்ளத்தை நிரப்பவேண்டும். அதற்கு ஆன்மீகச் செல்வங்களை அளிக்கவல்ல இலக்குமியை இரண்டாவது மூன்று தினங்களிலும் வழிபடுகின்றோம். அன்பு, காருண்யம், நிறைவு என்ற செல்வங்களால் நிரப்பப்படும்போது சாத்வீக நிலை கிட்டுகிறது. இந்த சாத்வீக நிலையே ஞானத்தைப்பெற ஏதுவான தன்மையாகிறது.

ஒரு சிமிலி விளக்கிலிருந்து பூரணமாக ஒளி முற்றாக அகற்றப் படுவதோடு. சிமிலியில் புகை அழுக்கு முற்றாக அகற்றப்படுவதோடு சிமிலியில் அழுக்குப் பிரளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அசுரத் தனங்கள், உள்ளத்தில் இருக்கும்வரை ஞானம், பேரறிவு வெளிப்படவாய்ப்பில்லையாகும். அதனால்தான் முதல் இரண்டு கட்டங்களிலும் அசுரத்தனங்களை அகற்றுவதற்கும் மீண்டும் அசுரத்தனம் தலையெடுக்காவண்ணமிருக்க ஆன்மீகச் செல்வங்களால் எம் உள்ளத்தை நிரப்பும் நிகழ்வு செய்யப்படுகிறது. அதன்பின்புதான் ஞானம் பெறுவதற்குரிய வழிபாடு செய்யப்படுகிறது. இதுவே, சரஸ்வதி வழிபாடாகும். பின்னர், விஜயதசமியில் ஜீவாத்மா பரமாத்மாவிடம் இரண்டறக் கலந்த அஞ்ஞானம் நீங்கிய வெற்றிவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களின் அர்த்தங்களைப் புரிந்து செயற்படும்போதே அதற்குரிய பலன்கிட்டுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சுவாமி விவேகானந்தர் கூறியது போல உலக மதங்கள் உயிரற்று கேலிக்கூத்துக்களாகி விட்டன. மனிதன் மனிதநிலையிலிருந்து கீழே இறங்கி விலங்கிலும் கீழ் நிலைக்குச் சென்றுவிட்டான். அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, ரஷ்யாவிலுள்ள பசுக்கள் என்னத்தை உண்ணுகின்றன. புல் என்பது வெளிப்படையே. ஆனால், மனிதனிடத்தே சீர்தன்மை இருக்கிறதா. சீனாவில் பாம்பு சாப்பிடப்படுகிறது. சில இடங்களில் தவளை, நாய்கள்...கூட. இவற்றால் வயிறு நிரப்பப்படுகிறது. எனவே, மனிதத்தை மீட்டெடுக்கப்பட கல்வி முறை முற்றாக மாற்றி அமைக்கப் படவேண்டும்.

ஆத்மசொருபன்

உதயன்

# அமெரிக்காவின் போக்கு மாறாதா?

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்தி தடைசெய்திருந்த அமெரிக்க அரசு மீண்டும் அதை உறுதி செய்துள்ளது.

இலங்கை அரசுடன் புலிகள் சமாதானம் பேசுகிறார்கள். அதை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கா, புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை இன்னும் கைவிடவில்லை. தொடர்ந்து அவற்றில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்கா இந்த நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்திருப்பது கவலையளிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். தமது அமைப்பு மீதான தடையை அமெரிக்கா நீடித்திருப்பதற்கு நியாயபூர்வமான காரணங்கள் எதுவும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசுப் படைகளுடன் தமிழர் உரிமைக்காக நீண்ட போராட்டம் நடத்தி வருபவர்கள் புலிகள். அவர்களது போராட்டத்தின் மூலம்தான் இன்று தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் ஓரளவுக்கேனும் கிடைத்திருக்கிறது எனலாம். தமிழர் உரிமைக்காகப் போராடியதைத் தவிர புலிகள் செய்த குற்றம் ஒன்றுமில்லை. தமது இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காக - சுயபாதுகாப்புக்காக - புலிகள் இயக்கம் போராடியது. தமிழ் மக்களை அடக்கியாள முற்பட்ட ஸ்ரீலங்கா அரசுகள் அந்தப் போராட்டத்தை பயங்கரவாதம் என்றன. உரிமைப்போரை முன்னின்று நடத்திய மக்களின் சக்தியான விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு புலிகளை தடைசெய்தது.

அடிப்படை மனித உரிமைகள் பற்றியும், தனிநபர் சுதந்திரம் பற்றியும் உலக நாடுகள் எங்கும் போதனை செய்துவரும் அமெரிக்காவும் பிரிட்டனும் முந்திய அரசு செய்த பிரசாரங்களை நம்பி புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்தி தடைவிதித்தன. அந்தத் தடை உத்தரவு வருடாந்தம் நீடிக்கப்பட்டும் வருகிறது.

இந்த நிலையில் தான் பிரதமர் ரணில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர அமுல் செய்வதில் அரசுத் தரப்பு காட்டிய பின்னடிப்புப் போக்கினால் வடக்கு - கிழக்குக்கு வலுவான இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தினால் சமாதானப் பேச்சுக்கள் நகராமல் நிற்கின்றன.

பிரதமர் ரணில் அரசு ஒரு துணிச்சலான நடவடிக்கையாக புலிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிவிட்டது. உள்நாட்டில் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து புலிகள் மீதான தடையை வெளிநாடுகளும் நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுப்பட்டு வந்தன.

நோர்வே தரப்பின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் இம்முறை சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டன. பேச்சுகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்பது அந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தலைமைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதப்பட்டது. அந்தவகையில் ஈழத்தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதை சர்வதேசம் அங்கீகரித்திருந்தது.

இந்தப் பின்னணியில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் சர்வதேசத்திடம் முக்கியமான மற்றொரு கோரிக்கையை விடுத்தனர். அதுதான் புலிகள் மீதான சர்வதேச தடைநீக்கம்.

உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு இவ்வாறு இருக்கையில அமெரிக்க அரசின் புதிய அறிவிப்பு பெரும் ஏமாற்றமாய் வந்திருக்கிறது.

தற்போது சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருக்கின்ற போதிலும் அவற்றின் பெறுபேறாய்க் கிடைத்த அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாடு இன்னமும் பாதிக்கப்படவில்லை. இந்த அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாட்டுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரமும் ஆதரவும் இன்னமும் நீடித்திருக்கின்றன. இந்நிலையில் புலிகள் மீதான தடை விடயத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் தொடர்ந்தும் கடும்போக்கை வெளிப்படுத்தி வருவது கவலைக்கும் ஏமாற்றத்துக்கும் உரியதாகவே இருக்கிறது. தடைப்பட்டுள்ள பேச்சுக்கள் விரைவிலேயே ஆரம்பமாகிவிடும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கிறார்கள் நாட்டு மக்கள்.

இந்தக் கட்டத்தில் அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகி இருப்பது சமாதான முயற்சிகளுக்கு பாதகமாகவே அமையும்.

சர்வதேச அபிப்பிராயம் என்பது இன்று அமெரிக்கச் செல்வாக்குக்கு உட்பட்டது என்பதால் ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போருக்கான அங்கீகாரம் என்பதில் அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

அமெரிக்காவின் இந்தப் போக்கு மாறுமா?

## பண்டத்தரிப்பு, இளவாலைப் பகுதியில்

# டீசல் திருடப்படுவதை அடுத்து பஸ் தரிப்பிடம் இடம் மாற்றம்

சண்டிலிப்பாய்,ஒக்.5

பண்டத்தரிப்பு சந்திக்கு அண்மையிலும், பெரியவிளான், இளவாலை ஆகிய இடங்களிலும் இதுவரை காலமும் இரவு வேளையில் நிறுத்தப்பட்ட வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் அனைத்தும் கடந்தவாரம் முதல் மல்லாகம் சந்திக்கு அண்மையில் உள்ள சபைக்குச் சொந்தமான டிப்போவில் இரவுத்தங்கலுக்காக நிறுத்தப்படுகின்றன.

பண்டத்தரிப்பிலும் பெரியவிளான் மற்றும் இளவாலை ஆகிய இடங்களிலும் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்களில் தொடர்ச்சியாக டீசல் காணாமல் போய் விடுவதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

- இவ்வாறு நீண்டகாலமாக இந்த இடங்களில் இரவு வேளையில் நிறுத்தப்பட்ட பஸ்கள் அனைத்தும் காலை வேளையில் மாதகல், சுழிபுரம் கிழக்கு மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலிருந்தும் -

இளவாலை. பெரியவிளான் ஆகிய இடங்களிலிருந்தும் தங்கள் வழமையான சேவையை ஆரம்பித்துவந்தன.

இந்த பஸ் வண்டிகளில் இருக்கும் டீசல் அடிக்கடி குறைவடைவதையும், சில வேளைகளில் முற்றாக இல்லாது போய் விடுவதையும், அவதானித்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைப்பீடம் இந்த பஸ்கள் அனைத்தையும் மல்லாகத்திலுள்ள சபைக்குச் சொந்தமான டிப்போவில் இரவு வேளையில் தரித்து நிறுத்துமாறு பஸ் சாரதிகளுக்கு பணிப்புரைவிடுத்தது.

இதனையடுத்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்த நடவடிக்கையினால் பஸ் பயணிகளுக்கும் சாரதி, நடத்துநர்களுக்கும் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-135)

# தொழில் திணைக்கள ஊழியர் பற்றாக்குறை விரைவில் நீங்கும்!

## மாகாணப் பிரதிப் பணிப்பாளர் தகவல்

காரைநகர்,ஒக்.5

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள தொழில் திணைக்களங்களில் காணப்படும் தமிழ்மொழி மூல உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பீ.ஆர்.கலுஆராய்ச்சி தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச செயலர் வே. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதிப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள தொழில் திணைக்களங்களில் 150 வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றினை ஜனவரி மாதத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதும் தொழில் திணைக்களங்களின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்தே இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

முல்லைத்தீவு, மூதூர் பகுதிகளில் தொழில் திணைக்கள அலுவலகங்களை திறப்பதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டங்கள் தோறும் தொழில் இல்லங்கள் திறக்கப்பட்டு அதன் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் இந்தக் தொழில் இல்லம் இதுவரை திறக்கப்படவில்லை. திருகோணமலையில் இயங்கும் தொழில் இல்லத்தில் இங்குள்ளவர்கள் பதிவினை மேற்கொண்டால் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.

தொழில் திணைக்கள யாழ். அலுவலகத்திற்கு தொழில் உபகரணங்கள் மற்றும் மேலதிக பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தெற்கில் உள்ள ஊழியர்கள் போன்று வடக்கு - கிழக்கில் உள்ள ஊழியர்களும் சம உரிமை பெற்றுக் கடைமையாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-73)

### பாடசாலைகள் பற்றிய முறைப்பாடு

# உடுவில் கல்விக் கோட்டத்தில் விசாரணைகள் துரிதகதியில்

வலிகாமம்,ஒக்.5

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலைகளில் குறிப்பாக உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக பெற்றோர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் பாடசாலை உள்ளக மேற்பார்வை நடவடிக்கைகளில் அதிபர்களுக்கு சில அழுத்தங்களை வழங்குவதற்கும் வலிகாமம் கல்வி வலய அதிகாரிகள் முன்வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில பாடசாலை ஆசிரியர்கள் சிலர் குறுகிய கால விடுமுறையைப் பயன்படுத்தி பல நாள்கள் பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் -

பல உயர்வகுப்பு மாணவர்கள் பாடசாலை நேரத்தில் பாடசாலையைவிட்டு வெளியேறி விடுவதாகவும் பெற்றோர் தரப்பு முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளின் பௌதிக வளங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைநாடி பாடசாலையைவிட்டு வெளியே சென்று விடுகின்றனர். இதனால், வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உள்ளக மேற்பார்வை செய்வதில்லை என்றும் - பெற்றோர் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடுகளை அடுத்தே கோட்டக்கல்வி அதிகாரிகளும், வலயக் கல்வி அதிகாரிகளும் பாடசாலைகளுக்கான தமது திடீர் பரிசோதனைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.(எ-152)

# காரைநகருக்கு நேற்றுமுதல் 24 மணிநேர மின்விநியோகம்

காரைநகர்,ஒக்.5

காரைநகர் பகுதிக்கான 24 மணிநேர மின்விநியோகம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4 மணியளவில் காரைநகர் மேற்கு, வடக்கு பகுதிகளில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் இந்த மின்சார விநியோகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக ஆறு மணிநேரம் குறுகிய நேர மின்சாரம் வழங்கப்பட்ட இப்பகுதிகளுக்கே நேற்றுமுதல் முழு நேர மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி உட்பட பத்துப் பகுதிகளுக்கும் நேற்றுமுதல் இந்த 24 மணிநேர மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-73-117)

# சங்கானை மின்தறி ஆலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஒக்.5

கடந்த 15 வருடகாலமாக இயங்காத நிலையிலுள்ள சங்கானை பல நோக்கு கூட்டுறவுசங்கத்தின் மின்தறி ஆலையை மீண்டும் இயங்கச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த நிலையிலுள்ள மின்தறி ஆலைக் கட்டடங்களையும், இயந்திரங்களையும் புனரமைப்புச் செய்து ஆடை உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இதன் மூலம் இப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கமுடியும் என்று அவர் தெரிவித்தார். (எ-135)

**நாளை**

புரட்டாதி 19
திங்கட்கிழமை
(06.10.2003)
திதி : ஏகாதசி
நண்பகல் 12.07 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 11.37 வரை
சுபநேரம்:12.02 - 1.32
ராகுகாலம்:7.32 - 9.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இறப்பிற்கு எப்பொழுதும் ஆயத்தமாய் இரு. அப்பொழுது வாழ்க்கையோ இறப்போ இனிமை பொருந்தியதாய் இருக்கும்.

# நாய் கடித்தால் அதுபற்றி அலட்சியம் வேண்டாம்!

## கோப்பாய் வைத்திய அதிகாரி அறிவுரை

வலி.கிழக்கு,ஒக்.5

கோப்பாய் பிரதேசத்தில் வளர்ப்பு மற்றும் தெரு நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் -

எனவே, இதுவிடயத்தில் பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் -

கோப்பாய் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ச.அருள்நேசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோப்பாய் பிரதேசத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் மட்டும் 95 இற்கும் அதிகமானோர் நாயினால் கடியுண்டுள்ளனர். அதே போல் கடந்த நான்கு தினங்களில் 20 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

- இவ்வாறு சிகிச்சை பெறுவோரில் பலர் தமது வளர்ப்பு நாய்தான் கடித்தது என்று கூறி அசண்டையீனமாக இருந்து விடுகின்றனர். இதனால், வீணான உயிரிழப்புகள் கூட ஏற்பட வாய்ப்புண்டு.

வளர்ப்பு நாயோ அல்லது தெரு நாயோ என்று பார்த்திருக்காமல் எந்த நாய் கடித்தாலும் உடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதோடு, கடித்த நாயினை 10 நாள்கள் தொடர்ந்து அவதானித்திருக்கவேண்டும்.

இதேவேளை - பொதுமக்கள் வளர்ப்பு நாய்களை வீதிகளில் விடாது வீட்டில் கட்டி வளர்க்கவேண்டும். பிரதேச சபையினரும் கட்டாக்காலிநாய்களை அழிக்கும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தவேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.(அ-180)

## யாழ். குடாநாட்டு மக்களே!

உங்களுக்கொரு நற்செய்தி!!

தரமான சுவையான உணவுத் தயாரிப்புக்கு ஏற்ற நல்ல எண்ணெய் இப்போது விற்பனைக்கு வந்துள்ளது! அதுதான்

**Vimal BRAND**

**Vegetable Oil & Coconut Oil**



UTHAYAN Graphics (22798)

- தயாரிப்புகள் அனைத்தும் சிங்கப்பூரிலேயே மேற்கொள்ளப்பட்டது.
- கொள்கலன்களில் உள்ள எண்ணெயும் பொதியில் உள்ள எண்ணெயும் தரம் ஒன்று.
- பொதியில் அடைக்கப்பட்ட எண்ணெயை மலிவு விலையில் பெறலாம்.

**விமல் Vimal BRAND**

மரக்கறி எண்ணெய்
தேங்காய் எண்ணெய்
சூரியகாந்தி எண்ணெய்
செயற்கை வினாகிரி

தரம் வாய்ந்தவை!

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்! அதன் உண்மையான தரம் விளங்கும்.

ஏக விநியோகஸ்த்தர்:

**AMT Transport Service**

இருபாலைச் சந்தி,
பருத்தித்துறை வீதி,
இருபாலை.
☎: 021 222 5784


## அறிவித்தல்

### அழைப்புக்கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

**தவராஜசிங்கம் பெண் கஜனா**
**(மகேந்திரநாதனின் மகள்)**
**ஊரெழு மேற்கு, சுன்னாகம்.**

வழக்கு இல.: மணநீக்கம்/187

வழக்காளி

எதிர்

**தம்பிப்பிள்ளை தவராஜசிங்கம்**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**
**தற்போது ஜேர்மனி (சரியான விலாசம் தெரியாது)**

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன்முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**இ.வசந்தசேனன்**
சட்டத்தரணி
வரைவு

நீதிமன்றக்கட்டளைப்படி
**ம.செல்வரத்தினம்**
பதிவாளர்

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளை கொடுத்துதவுமாறும் 80-ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம், பதிவாளர் (23319)(29-13-16)

2003 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் நாளாகிய இன்று.


## ஆங்கிலம் கற்க ஆசையா? ஏன் தாமதம்

**தபால் மூல இலவச ஆங்கில பாடநெறியில் இணையுங்கள்**

90 நாட்களில் சரளமான ஆங்கில அறிவுடன் DIPLOMA சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக் கொள்ளுங்கள்

அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படும்.

**FREE- FREE இலவசம் இலவசம்**

அழகிய குடை or டீ.சேர்ட் இலவசம்

எமது நிறுவனத்தின் நான்கு வருட பூர்த்தியை முன்னிட்டு இணையும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 4.50/= பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்க.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83 KANDY. Tele: 0777-802 849



## மங்களகரமான திறப்பு விழாவும் அதிரடி விலைக்கழிவும்

இன்று புரட்டாதி 18ம் நாள் (05-10-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.02-10.32 மணி வரையுள்ள சுப வேளையில் வெள்ளவத்தையை தலைமையகமாக கொண்டு இயங்கும் Cheapcom (Pvt) Ltd தாபனத்தார் தமது கிளையை Campus சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலியில் கோலாகலமாக திறந்து வைக்கப்படுகிறது.

உங்களுக்குத் தேவையான Brand New மற்றும் Recondition Computer களை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்.

**CHEAPCOM PRIVATE LIMITED**
Campus Junction, Palaly Road, Thirunelvely
**Hot Line - Nimmi - 0777-661216**

## அதிரடி விலைக்கழிவு !

இன்று வரும் முதல் மூன்று வாடிக்கையாளருக்கு 20% விலைக்கழிவும் ஏனையோருக்கு 5% விலைக் கழிவும் வழங்கப்படும் என்பதை கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்

அனைவரையும் அழைக்கின்றோம்!

| Mother Board | Proccssor | RAM | Hard Disk | With 15" Monitor |
|---|---|---|---|---|
| Pentium I | 166 Mhz | 32 MB | 2.0 GB | 13,900/= |
| Pentium I | 200 Mhz | 32 MB | 2.1 GB | 15,900/= |
| Pentium I | 200 Mhz | 64 MB | 2.1 GB | 16,400/= |
| Pentium II | 266 Mhz | 64 MB | 3.2 GB | 20,900/= |
| Pentium II | 300 Mhz | 64 MB | 3.2 GB | 21,900/= |
| Pentium II | 350 Mhz | 64 MB | 3.2 GB | 24,900/= |
| Pentium II | 400 Mhz | 64 MB | 4.3 GB | 26,900/= |
| Pentium II | 450 Mhz | 64 MB | 6.4 GB | 28,900/= |
| Celeron | 266 Mhz | 64 MB | 3.2 GB | 20,400/= |
| Celeron | 300 Mhz | 64 MB | 2.1 GB | 21,400/= |
| Celeron | 366 Mhz | 64 MB | 6.4 GB | 23,400/= |
| Pentium III | 450 Mhz | 128 MB | 4.3 GB | 33,900/= |
| Pentium III | 450 Mhz | 128 MB | 6.4 GB | 34,900/= |
| Pentium III | 450 Mhz | 128 MB | 8.4 GB | 36,400/= |
| Pentium III | 500 Mhz | 128 MB | 9.0 GB | 37,900/= |

ALL above systems included with CD ROM, Floppy Sound Card also Key Board & Mouse

**15" Digital Monitor - 6,000/=**
**19" Digital Monitor - 17,500/=**
**21" Digital Monitor - 24,000/=**

GMN

**Head Office -**
No 7-1/4A, Orchard Shopping Complex,
Galle Road, Wellawatte. (opp. Savoy Cinema)
Tel / Fax : 01- 2503870

*Kwality @ lo -Cost*

# மானம் காத்த மறக்குடி வேந்தன்!



3

ஆக்கம்: புலவர் ம.பார்வதிநாதசிவம்

பகை நாட்டவர்க்கோம தங்கொள் களிறாய்
உள்நாட்டவர்க்கே உவகை செய் பசுவாய்
சேரன் ஆண்டனன் செகம் வியந்திடவே!
உழவுத் தொழிலின் மேன்மையைக் கருதி
உழவர் தம்மை மதித்திடல் ஆயினன்!
மழை நீர் சிறிதும் வீணாகாமல்
குளங்கள் தொட்டே வளங்கள் பெருக்கினன்!
கல்வியின் மேன்மை கருதியோன் ஆதலின்
கற்றவர் தம்மை மெத்தவும் மதித்தே
கல்விப் பயிரை வளர்க்கும் பொறுப்பை
அவரிடம் கொடுத்தே ஆவன செய்தனன்!
பழையநூல் பேணவும் புதியநூல் ஆக்கவும்
அறிஞரை ஊக்கி வேண்டுவ கொடுத்தன்!
நடனம் சிற்பம் ஓவியம் இசையெனும்
கலைகள் யாவும் வளர்ந்திடச் செய்தனன்!
ஆட்சிச் சிறப்பால் மகளிர் அனைவரும்
உரிமைகள் உடையராய்ச் சிறப்புடன் வாழ்ந்தனர்
மாதரை இழிவு செய நினைப்பதையே
தீதென ஆடவர் எண்ணினர் அதனால்
இல்லறம் என்பது பல்கலைக்கழகமாய்
இலங்கக் கண்டனர் விருந்தாய் வருவோர்!
தமிழ்விழா ஒரு புறம் இசைவிழா ஒருபுறம்
சமய விழாவோ மற்றும் ஒரு புறம்
இப்படித்தமிழ் நாடிருந்ததால் யாவரும்
தமிழனாய்ப் பிறத்தல் முன்தவம் என எண்ணினர்
உலக மொழிகளில் தமிழே முதல் மொழி
உலக கலைகளில் தமிழ்க்கலை சிறந்தது
நாகரிகத்திலும் தமிழினம் தனி இனம்
என்பதை யாவரும் ஏற்றுக் கொண்டனர்!
எங்கும் மகிழ்ச்சி என்றும் மகிழ்ச்சி
இது செங்குட்டுவன் ஆட்சியின் சிறப்பே!


கொற்றத்தை ஒன்றன்று இரண்டும் அன்று
கூறுமோர் ஐம்பத்தைந்தாண்டு காலம்
வெற்றியுடன் இவன் ஆண்டான் என்னும் போதே
விளங்குமிவன் ஆட்சி கொண்ட சிறப்பு யாவும்
பற்றுளத்தால் தமிழ் மொழியைத் தமிழ் நன்னாட்டைப்
பண்பமைந்த தமிழ்க் குடியைக் காத்தே கூறும்
குற்றமெதும் அணுகாத புதுமை வாய்ந்த
குன்றமென விளங்கினான் புகழ்ந்தார் நாலோர்!

இவன் தந்தை இறந்ததும் செய்வதான
ஈமத்துக் கடனெல்லாம் முறையாய்ச் செய்தே
நவை தீர்ந்தோர் உரைத்தபடி சாம்பல் தன்னை
நற்கங்கை நீரிலே கலத்தல் வேண்டி
அமையுமொரு படையினுடன் வட நாட்டெல்லை
அணுகினான் அவ்வேளை வடக்கின் மன்னர்
நமது மண்ணில் நீ கால்கள் வைப்பதென்றால்
நமது தலை அற்ற பின்தான் என்று நின்றார்.

களத்திலெழும் தீ யாலே பெரியதான
காடெல்லாம் அழிவது போல் வடவர் எல்லாம்
பிணக்குவையே ஆனார்கள் சேர மன்னன்
பெருவெற்றி தனைக் கண்டான் புலவர் தாமே
மனக்களிப்பால் பாமாலை சூட்டினார்கள்
மக்களெல்லாம் வாயார வாழ்த்தினார்கள்
நினைத்ததினை நினைத்து விதம் செய்யும் சேரன்
நிலம் வியக்கும் வெற்றியுடன் நாடு சேர்ந்தான்.

வளரும்.....

# உருமாறிய 'திருமாரிகள்'



"ஏ நையின்" பாதை திறந்தது!
'ஏயார்லைன்' புதுசாய்ப் பறந்தது!!
வந்தார்கள்.....
அந்நிய மோகத்தின் அசிங்கங்களை
அணிந்த அண்ணியர்கள், அன்னையர்கள்......
தாவணிகளைத் தொலைத்த
தங்கையர்கள்....
வந்தார்கள்.....
கதகளிக்காரர் போல்
கண்களில் மைகள்.....
சதைகள் பிதுங்கும் சீர உடைகள்.....
உதடுகள், முடிகளில் உருமாற்றும் சடையல்....

'மிஸ்வேல்ட்' கோலங்களில்
'பஸ் கோல்ட்' அவலங்கள்.....
இதற்கிடையில் இதனைப் பார்த்து
தேவ கன்னியோ! எனும்
தாப ஏக்கத்தில்
நாவரளும் நம்மிளைஞர்.....
பூ அணிந்து பொட்டிட்டு
புதுக்கோலம் போடும்
தாவணிச் சோலைகள்
இனித்தவிடு பொடி!
ஆபாசங்களை விற்று
நாகரீகம் வாங்கும்
உருமாறிய
இத்திருமாரிகளுக்கு
எங்கள் மண்ணில்
ஏதிலியாய் ஏங்கியிருந்த
அப்பப்பாக்கள் தான்
இப்போ அரவணைப்பு!
அப்பப்பா.....
இது தப்ப(ா) ப்பா!?

-மானிப்பூர் ரட்ணேஸ்.

# கவிதைக் கணங்கள்

# இரசிக்கலாம்.....



நீ தொலைபேசி எண்கள்
மீது அழுத்துகையில் - உன்
பஞ்சு விரல்கள்
ஐந்தும் சேர்ந்து
அருமையாய் ஆடும் நாடகத்தை
நாளும் இரசிக்கலாம்......

அழைப்புமணி அடிக்கையில் - நீ
சட்டென்று ஓடிவந்து
பட்டென்று ரிசீவரைத் தூக்கி
பழுத்த கன்னத்தில் வைத்து - பின்
காதோரம் சரிபண்ணி
ஹலோ சொல்வதை இரசிக்கலாம்.....

தொலை பேசுகையில்
"தோன்றாத மறுமுனை உருவத்தை"
பாராத பரிதவிப்பில் - நீ
"கண்களைப் புரட்டி புரட்டி"
கற்பனையில் பார்ப்பாயே!
அத்தனையும் இரசிக்கலாம்......

ரி.சிவாஸ்கரன்.

சத்தமில்லாமல் நேசிப்பிற்கு
அர்த்தம் சொல்லிச் சென்று
மௌனத்தை தான் மொழியாக்கி
எங்கோ உலவுகிறாய்.....
உன் நதிக்கரை நந்தவனத்திற்கு
நீயுள்ளவரை
விழுதுகள் நிலைத்திருக்கும்.....
உன்னைத் தேடி
களைத்துப் போனதோ என்னவோ
உன்னைக் கண்ட கணம்
என் கண்கள் ஜீரணிக்கவில்லை....
உதிர்ந்த சருகிற்கும்
உயிர்த்த பூவிற்கும் தெரியும்
உன்னை நினைத்தவள்
உனக்காக
வாழுகிறாள் என்று.......

யாழினி. எல்

என் கன்னத்தில் அறைந்தவர்கள் யாருமில்லை
பாசத்தோடு
இதயத்தில் எட்டி உதைத்தவர் இல்லை
அன்போடு
என்புகள் நெருங்கிபோக அணைத்தவர் இல்லை
காதலோடு
மலராய் அள்ளி எடுத்தவர் இல்லை
கனிவோடு

ஆனால்
என்னை சிரிக்க வைத்தவருண்டு
நடிப்போடு
என்னை நடத்திச் சென்றவருண்டு
பணத்தோடு
நான் உணர்கின்றேன்
என் இதயம் வெறும் சதையாலானது
என் என்புகள் பளபளக்கும் வெண்களி
என் நரம்புத் தொகுதி இரத்த வாடை வீசும்
சாக்கடை
எரியும் புயலாய் மனம்
மனிதமும் இல்லாத
மிருகமும் இல்லாத
எவனோ கலந்து செய்த கலவை நான்
ஆயினும் நான் "ஆளவந்தானில்லை"

நந்தன்
சுதுமலை

# விரைவு மாறும் உலகில்
## மறக்காத சில நினைவுகள்

நீளும் பொழுதுகளில்
நிலவுலகமே
நிறம்மாறிக் கொண்டிருக்கின்றது....

நேற்று வரை - என்
மச்சானோடு
துள்ளித் திரிந்த
வயல்வெளி.......
ஆலமரத்தடி.......
கனகமக்காவின் கடைத்தெரு....
எல்லாவற்றுக்குமே - இன்று
பொன்முலாம் பூசப்படுகின்றன.

என் தோளை
அழுந்திப் பிடித்து
பட்டாம்பூச்சி பிடிக்க
அவள் - அழுதபோதெல்லாம்
எங்களை,
துரத்தித் துரத்தி
குண்டடித்த கொடுமைப் பூச்சிகள்
இப்போது தாளப் பறந்து
எம்மவர்களை ஏற்றிப்
பயணம் போகின்றன.

ஒரு ரூபா
சூப்புத்தடி இனிப்புக்காய் -
என்னைக்
கெஞ்சிக் கெஞ்சி
முத்தத்தால் கொஞ்சி
நனைக்கும்
சின்ன மச்சாளின் நினைவுகள்
இன்னும்
அகலவேயில்லை
இப்படி
இன்னும் ஏராளம்
எல்லாமே மாற்று முகத்துடன்.

மச்சியும்
பேரக் குழந்தைகளைச் சுமந்து
லண்டனில் அம்மம்மாவாக
சிற்றிசன் வாங்கிவிட்டாள்.
நான் மட்டும்
அப்போது நோக்கிய
விடியலின் திசையை நோக்கியே
இப்போதும் தவமிருக்கிறேன்.

-எம்.சுபர்சன்
கோண்டாவில்.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சிவன் கோயில் வீதியில், கோயிலுக்கருகில் 5 பரப்பு வெறும் காணி (கிணற்றுடன்) விற்பனைக்கு உண்டு. காணியை நேரில் பார்வையிடுவோர் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் வசிக்கும் சோமசுந்தரம் மூலம் பார்க்கமுடியும்.

தொடர்பு:
S.S.மதியாபரணன்,
7A, கம்பல் பிளேஸ், தெஹிவளை.
T.P:- 01-2713163

(15-11-21) (23283)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலைபிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மசிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(30457)

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11
-
11
-
1922



மறைவு
23
-
09
-
2000

அரியாலையூர்

### அமரர் சு.அருளானந்தம்

திதி: பூர்வபட்சத் தசமி 05.10.2003

என்றும் எம் இதயக் கமலத்தில்

தந்தையே!

குடும்பம் எனும் கோயிலிலே தெய்வமாக இருந்த நீங்கள்
ஸ்ரீ சித்திவிநாயகர் பக்தனாக இறுதிவரை வாழ்ந்தீர்கள்
வாழ்வில் தெய்வபக்தி வேண்டும் என்று எம்மை வழிநடத்தினீர்கள்
நாம் பள்ளியில் படியாத வாழ்க்கைப் புத்தகம் ஐயா நீங்கள்
தரணியில் அரியாலை, அருகினிலே மாரிதீர்க்கை
மாணம்பூ உன்கனவும், உன்திதியும் ஒன்றாக
சங்கமித்த இந்நாளாம் ஆண்டு மூன்றில்
உன்பாதம் போற்றி உயர்ந்திடுவோம் இந்நாளில்.

(26-21-11-15)


அ.சந்திரகுமார் *(மகன்)*,
*221/5, கண்டி வீதி,*
*அரியாலை.*

(23279)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
20
-
10
-
1937



இறப்பு
05
-
09
-
2003

### அமரர் V.கனகரத்தினம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

பாசத்தின் பிணைப்பினாலே அரவணைத்த தீபமே!
உந்தன் மறைவினாலே ஒளியிழந்து போயிற்றோம்
மீண்டுவர முடியவில்லை உந்தனது நினைவி நின்று!
ஆத்மாவின் சாந்திக்காய் துதிக்கின்றோம் இரங்கலுடன்.

இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-. குடும்பத்தினர்.

வாங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(23292) (26-21-11-15)

## கணித, விஞ்ஞான போட்டிகள்

வலி.தெற்கு,ஒக்.5

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 6 முதல் 10வரையான 12ஆம் தரவகுப்பு மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களை அன்றையதினம் போட்டிக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோட்ட மட்டங்களில் இருந்து வலய மட்டத்துக்கான போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (எ-152)

## அட்டகாசம் புரிந்த இளைஞர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.கன்னாதிட்டிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினமிரவு மது போதையில் அட்டகாசம் செய்த 20இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டனர்.

அப்பகுதியில் நின்று கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்ட இக்குழுவினர் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தமையாலேயே கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டபின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ம-8)


**நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு**

நான்கு படுக்கை அறைகளுடன் வாகனத் தரிப்பிடமும் சேர்த்து அமைக்கப்பட்ட மேற்படி வீடு, யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ளது.

அரச, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தோர்க்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு:
க.கிருஷ்ணபிள்ளை
334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel-2316

(21-11-15) (23257)


உ

## திருமுறைத் தேனமுது ஒலிப்பதிவு நாடா வெளியீடு - 06

இடம்: கம்பன் கோட்டம், கோவில் வீதி, நல்லூர்
காலம்: இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00மணி
விடயம்: **மூவர் தேவாரங்கள்**
பாடியவர்: கலாபூஷணம், தேவார இசைமணி
**கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்**
தலைவர்: திரு. க.சிவராமலிங்கம்
ஆசியுரை: ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள்
பிரதம விருந்தினர்: திரு. ச.விநாயகமூர்த்தி
சிறப்பு விருந்தினர்: திரு. மு.திருநாவுக்கரசு
பிரதி ஒன்றின் விலை: ஒலித்தட்டு 750/=
ஒலிப்பேழை 250/=

திருமுறை ஆர்வலர் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ்.வெற்றிவேலாயுதம,
தலைவர்.

இ.குகதாசன்,
செயலர்.

(23194) திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகம்

## ஒரு வருட நினைவில்

பிறப்பு
23
-
03
-
1921



இறப்பு
05
-
10
-
2002

### அமரர் அன்ரனி கஸ்மீர் யோசப்

(ஓய்வுபெற்ற சிறுகைத்தொழில் ஆசிரியர்)

ஆண்டு ஒன்று ஆனாலும் - பப்பா
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட தூரம் நீங்கள் சென்றாலும்
நீங்கவில்லை உம் நினைவு
கண்களில் நீரோ வற்றவில்லை
எம் நெஞ்சில் உம்முகம் என்றுமே அழியாது.

(23243)

*இல.121, சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


## கியுபிட் போட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

விசாரணைகள் யாழ்.நகரில்
தொலைபேசி 222- 3191

# ஆதரவற்ற சிறுவரை அரவணைக்கும் பணியில் 11 ஆவது ஆண்டை நிறைவுசெய்யும் 'புனிதபூமி'

**அழகும் வளமும் கொழிக்க நீலக்கடல் தாலாட்டும் முல்லை மண்ணில் சேவையாற்றும் புனிதபூமி சிறுவர் நலம் காப்பகம் தனது 11 ஆவது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடுகிறது. அதனை ஒட்டி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**

கொள்ளை எழில் கொஞ்சும் முல்லை நகரின் முத்துஐயன் கட்டில் அமைந்து எல்லோர் மனங்களிலும் இன்று இடம்பிடித்து 11 ஆண்டுகளாக இளம் சிறார்களின் தாய் மடியாக விளங்குகிறது "புனிதபூமி சிறுவர் நலன் காப்பகம்"

அன்பு, அரவணைப்பின்றி அநாதரவாக வீதிகளில் அலைந்த பிஞ்சு உள்ளங்களைப் பேணிப்பாதுகாத்து அறிவூட்டி ஆளாக்கிவிடும் அளப்பரிய பொறுப்பும் தார்மீகக் கடமையும் அனைவருக்கும் உண்டு என்ற பரந்த நோக்குடன் புனிதபூமி சிறுவர் நலன் காப்பகம் 1992ஆம் ஆண்டு லெப்டினன்ட் கேணல் அன்பு அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அக்காலப் பகுதியில் முல்லை மாவட்ட சிறப்புத் தளபதியாக விளங்கிய லெப்டினன்ட் கேணல் அன்பு அவர்களின் சிந்தனையில் உதித்து செயல்வடிவம் பெற்ற 'புனிதபூமி' சிறுவர் நலன் காப்பகம், இன்று 12 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைககின்றமை ஒரு சிறப்பான நிகழ்வாகும்.

அயராத பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றி வரும் தன்மையை புனிதபூமி சிறுவர் நலன் காப்பகத்தில் உயர்வாகக் கண்டுகொள்ளலாம். 6 வயதுமுதல் 18 வயது வரையான 125 இற்கும் மேற்பட்ட சிறார்களை ஒழுக்க சீலர்களாக்கி கல்வியூட்டி வளர்த்து விடுவதையே குறியாகக் கொண்டு செயற்பெற்றுவரும் பணி மகத்தானது; மகோன்னதமானது.

முன்னைய காலங்களில் எமது தாயகத்தை முழுமையாக விழுங்கி அழிவுகளையும், அவலங்களையும் அள்ளி இறைத்துக் கொண்டிருந்த கொடிய போரும், அன்றைய அரசின் செயற்பாடுகளும், எமது மக்கள் மனங்களில் ஏற்படுத்திய காயங்கள் படு பயங்கரமானவை; ஆறாதவை.

அதுவும், இளம்பிஞ்சுகளின் உள்ளங்களில் மோசமான பாதிப்புக்களை அவை ஏற்படுத்தியதன் விளைவே இன்று சிறார்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாகவும், பிச்சை எடுக்கவும், கூலிவேலைக்குப் போகவும் என சிறுவர் உரிமைகள் மறுக்கப்படவும், சிறுவர்கள் வதைக்கப்படவும் மூலகாரணமாகும்.

நீண்டகால இரத்தக்கறை படிந்த அவல வாழ்வில் இருந்து தமிழ் மக்கள மீள எழுவது என்பது உடனடியாக முடியாத காரியம். சோகங்கள், அவலங்களை, இழப்புக்களை வெறும் கதைகளில் படிக்கவில்லை. இரத்தமும் சதையுமாக நாம் அனுபவித்தோம். ஆயிரம் ஆயிரம் சிறார்கள் தாய், தந்தை அன்பை இழக்கவும், உறவுகளைப் பிரியவும் துயரத்தில் கண்ணீரில் கரையவும் கடந்த காலப் போரும், பொருந்தாத ஆட்சியும் வழி கோலின. இவ்வாறு கடந்த காலத்தில் அநாதரவான சிறுவர்களின் எதிர் காலத்தை சீர்ப்படுத்தும் பொறுப்பை ஏற்று செயல் வடிவம் ஆக்கினார் தேசியத்தலைவர் வேபிரபாகரன் அதன் பயனாக - குறிப்பாக - வன்னியில் - ஆதரவற்ற சிறுவர் இல்லங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர் நன்னடத்தை, உளவளவிருத்திச் செயற்பாடுகளில் கூடிய கரிசனை கொண்டு செயற்பட்டதால் காலப்போக்கில் சிறுவர் இல்லங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகமே வழிநடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. வன்னியில் குருகுலம், காந்தி நிலையம் (முன்னரே இயங்கிய இல்லங்கள்) பாரதி இல்லம், குழந்தைகள் பராமரிப்பு இல்லம், புனிதபூமி சிறுவர் நலன் காப்பகம் எனச் சிறுவர் இல்லச் செயற்பாடுகள் விரிவடையத் தொடங்கின. தற்போதைய சுமுக சூழ்நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இயங்கிவரும் அநேகமான சிறுவர் இல்லங்களை நேரில் சென்று பார்வையிட்டு நெறிப்படுத்தி வருவதுடன், இயங்கமுடியாத நிலையிலுள்ள இல்லங்களை தொடர்ந்தும் இயங்கவைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துரிதநடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறுவர் நலன் திட்டங்களில் அதீத கவனமெடுத்து செயற்படுத்துவதன் மூலம் சிறுவர் உரிமைகளை, உணர்வுகளை மதிப்பளிக்கும் தன்மை இன்று பலராலும் உணரப்படுகின்றது. 11 ஆவது ஆண்டை நிறைவுசெய்யும் 'புனிதபூமி' சிறுவர் நலன் காப்பகம் உண்மையிலேயே மிகச்சிறப்பாகவும், ஏனைய இல்லங்களுக்கு முன்னுதாரணமாகவும் இயங்கிவருகின்றது. இவ்வில்லச் சிறார்கள் நற்பண்பு மிக்கவர்களாகவும், தத்தம் அறிவு, ஆற்றல்களை வளர்க்கவும் அவற்றை வெளிக்கொணரவும் விடாமுயற்சியில் ஈடுபடுகின்றமை இச்சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமானது என்பதையே கட்டியம் கூறுகின்றது. மட்டற்ற மகிழ்ச்சி இல்லச் சிறார்களின் உள்ளங்களில் இருக்கின்ற போதிலும், முத்துஐயன் கட்டு கிராமத்தைப் பொறுத்தவரை போதிய அடிப்படை வசதிகள் எதுவுமே ஏற்படுத்தப்படவில்லை. வைத்தியசாலை, பாடசாலை எதுவுமே முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாததன் விளைவு சிறுவைத்தியத் தேவைக்குக்கூட நீண்ட தூரங்களைத் தாண்டி முல்லை மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும். போதிய வளங்கள், வசதிகள் இக்கிராமச்சூழலில் ஏற்படுத்தப்படவேண்டிய தேவை நிறையவே உள்ளது.

இந்நிலையில்தான் புனிதபூமி சிறுவர் இல்லச் சிறார்களின் நிலைமையை உற்றுணர்ந்த தமிழர் புனர்வாழ்வுக்கழக அமெரிக்கக்கிளையினர் வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.




கடந்தகால போர் நடவடிக்கைகளால் புனிதபூமி சிறுவர் நலன் காப்பகக் கட்டடங்கள் யாவும் அழிவுக்குள்ளான நிலையில் அனைத்தையும இழந்து இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. இருந்தபோதிலும், வள்ளிபுனம் பகுதியில் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பெற்று, இல்லச் சிறார்கள் வழமைபோலவே உரிய கவனிப்புடன் பராமரிக்கப்பெற்று வந்தனர். வேண்டிய அனைத்துத் தேவைகளையும் இயன்றவரை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுசெய்து, கொடும் யுத்த நெருக்கடி மிக்க காலத்திற்கூட இல்லச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டுவந்தமை விதந்துரைக்கப்படவேண்டிய ஒன்றாகும்.



**வேலணையூர்: சுரேஷ்**

இராணுவப் பிடியிலிருந்து முத்துஐயன்கட்டுப் பகுதி விடுவிக்கப்பட்டதன் பின்னர் மீள புனிதபூமி சிறுவர் நலன் காப்பகம் தனது சொந்த இடத்தில் இயங்கி வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழக அமெரிக்க நோர்வே, டென்மார்க் கிளைகளின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் புனிதபூமி வளாகத்தில் புதிய கட்டடங்களை அமைத்து அத்தியாவசிய தேவைகளுக்கு உதவி வருகின்றது.

தேசம் கடந்து வாழ்ந்தாலும் பாசம் மறவாத உறவுகளின் அன்பும், ஆதரவும்தான் தாயகத்தின் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இத்தகைய சிறுவர் நலன் திட்டங்களை சிறப்பாகவும், ஏனையோர் நடத்தும் சிறுவர் இல்லங்களுக்கு முன்னுதாரணமாகவும் நடத்த உற்றதுணை என்றால் மிகையாகாது.

இன்றைய சிறுவர்களே நாளைய வாழ்வியக்கத்தின் சக்தி, அவர்களே எமது எதிர்காலம். எனவே, முளையிலிருந்தே தக்கவாறு பராமரிப்பது உகந்தது. இவ்வில்லங்களில் உள்ள சிறார்கள் பாடசாலைகளில் கல்வி கற்கும் அதேவேளை, பிரத்தியேக வகுப்புகள் ஒழுங்குபடுத்தப்பெற்று அவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு ஊக்கம் அளிக்கப்பெறுகின்றது. சிறுவர்களின் பல்துறை ஆற்றலை வளர்க்கும் பொருட்டு இவ்வில்லத்தில் இயல், இசை, நடனப் பயிற்சி, கராத்தே வகுப்புக்கள் என்பனவும் துறைசார்ந்தோரால் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள், ஆண்டு விழா, தமிழ்த்தினம், ஓவியம், கையெழுத்து சஞ்சிகை, தொழில்நுட்ப அறிவியல் கண்காட்சி போட்டிகள் என்பனவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

கடினமான பாதைகளைக் கடந்து பயணிக்கும் புனிதபூமி சிறுவர் இல்லத்திற்கு தேவைகளும் நிறையவே உள்ளன.

கல்வித்துறையில் சிறார்களின் காத்திரமான முன்னேற்றத்திற்கு சிறுவர் இல்லங்களுக்கு கணனி வசதி, நூலக வசதி, விஞ்ஞான ஆய்வுகூட வசதி என்பன இன்றியமையாதவையாகும்.

சிறுவர்கள் - பராமரிப்பாளர்கள், பணிப்பாளர்களுக்கான தங்குமிட வசதிகள், பிரார்த்தனை மண்டபம், கற்றல் மண்டபம் எனக் கட்டட வசதிகள் போதாமல் உள்ளன.

சிறுவர்களின் குரல் பரந்தளவில் பலரையும் சென்றடைவதற்கான ஒரு முக்கிய மார்க்கம் அவர்களுக்கு ஊடாக வாய்ப்புக்களை மேலும் அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

சிறுவர் இல்லங்களில் பிள்ளைகள் விளையாடுவதற்கும், கூடிப் பழகுவதற்கும், தம் உரிமைகள் பற்றிக் கற்றுக்கொள்வதற்கும் சிறுவர் நேய இடங்கள், பூங்காக்கள், இயற்கைக் காட்சியங்கள் என்பன அமைக்கப்பட வேண்டும்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட சிறுவர்களுக்கு வாழ்வில் முன்னேற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பெற்றுள்ளன. தொழிற்பயிற்சி நிலையம் சகல வசதிகளுடன் விரிவாக்கப்பட வேண்டியுள்ளது.

சிறுவர்கள் கலைத்துறையில் ஆர்வமும், ஆற்றலும் மிக்கவர்களாக உள்ளனர். இவர்கள் கலையாற்றலை வளர்த்து தமக்கும் தாம் சார்ந்த இல்லங்களுக்கும் நற்பெயர்களை, பாராட்டுக்களை சம்பாதித்துதந்துள்ள போதிலும், கலைச் செயற்பாட்டிற்கு வேண்டிய இசை வாத்தியக் கருவிகளோ, இதர வசதிகளோ சொற்ப அளவும் இல்லை.

இத்தகைய பற்பல வசதிக் குறைகளுக்கும் மத்தியில் எதிர் நீச்சலிட்டு நிறையச் சாதிக்கத் துடிக்கும் சிறார்களின் வாழ்வகங்களான சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் பணிகள் விசாலமானவை.



அத்தகைய வியக்கத்தகு பணிகள் தாயகத்தில் சிறக்கவேண்டி கொஞ்சும் குழந்தைகள் வாழ்வில் ஒளி பாய்ச்ச அள்ளிக் கொடுக்கும் கரங்கள் போற்றுதற்குரியவை. *

---

**ஐ.நாவில் ஈராக் போர் குறித்து பிரதமர் ஆற்றிய உரை:**

# நாடாளுமன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும்

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஈராக் போர் தொடர்பாக ஆற்றிய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம எம்பி. நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை ஆதரித்து ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ஆற்றிய உரையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது. பிரதமரின் பேச்சு இந்நாட்டு முஸ்லிம்களது மனதைப் புண்படுத்தியுள்ளது. மத்திய கிழக்கில் முஸ்லீம் நாடுகளில் லட்சக்கணக்கான இலங்கையர்கள் தொழில புரிகின்றனர். பிரதமரின் உரையால் அந்த நாடுகளுடனான நட்பில் விரிசல் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இலங்கையின் அணிசேரா கொள்கைக்கு முரணாக பிரதமரின் பேச்சு அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய ஜனாதிபதிக்குக் கிடைத்த வாய்ப்பைத் தட்டிப் பறித்துக்கொண்டு சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்படியா உரையாற்றுவது? பிரதமர் தமது உரையில், அமெரிக்கா சர்வதேச பொலீஸ்காரனாக செயறபடுவதைத்தவிர வேறு வழியில்லை எனத தெரிவித்துள்ளார்.

ஈராக் இலங்கையின் நீண்ட கால நட்பு நாடு. அத்துடன் இலங்கைத் தேயிலையை பெருமளவில் கொள்வனவு செய்கிறது - இவ்வாறு அவர் கூறினார்.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடப்பு ஆண்டு
## விண்ணப்ப முடிவு திகதி 31-10-2003

ஏன் இன்னும் தாமதம், நீங்கள் க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றால் என்ன? பெறாவிட்டால் என்ன? பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பை மேற்கொள்ளலாம்.

ஓர் இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6ஆம் நாள் ஆரம்பித்து இதுவரை 1100இற்கு மேற்பட்ட கற்போருக்கு பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, M.Phill. ஆய்வுப் பட்டப்படிப்பை மேற்கொள்ள வழிவகுத்துக் கொடுத்ததுமல்லாமல் 15இற்கு மேற்பட்ட மேற்படிப்பை முடித்துப் பட்டம்பெறவைத்து அரும் சாதனை படைத்த பெருமை இலங்கையின் ஏகபிரதிநிதிகளும் பட்ட, பட்டமேற்படிப்புகளை மேற்கொள்ளும் ஒரே ஒரு தனியார் கல்வி நிலையமுமான அம்பிகா உயர்கல்வி நிலையத்துடன் இன்றே தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:-

1. தளர்த்தப்பட்ட பாடத்திட்ட முறையில் விண்ணப்பிப்பதற்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பமாகும்.
2. சில புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
3. டிசெம்பர் மாதம் நடைபெறும் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி திகதி 28.10.2003.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

நிர்வாகப் பணிப்பாளர்,
அம்பிகா உயர்கல்வி நிலையம்
இல.46, புதிய செட்டி வீதி, கொழும்பு-13,
தொ.இல: 2386722. 2433060.

(21-11-15) (C/30514)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகில் மாந்தருடன் | விண்ணுலகில் மாதேவனுடன் |
|---|---|
| 09 | 12 |
| 01 | 10 |
| 1934 | 1997 |

அமரர் P.K.பாலசிங்கம் (படியாதவன்)

[இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)]

அப்பா!

உங்கள் மறைவின் பின்னர்தான் கண்ணீர்
இன்றி அழுகின்ற உத்தியை வாழ்க்கையில்
இப்போதுதான் அறிந்தேன் அப்பா.

P.K.B.பாலஸங்கர்,
விதானை சங்கரியா வளவு,
718, கே.கே.எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். (C/30525)

மனைவி,
பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், மருமக்கள்.
(21-11-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பூவுலகு | விண்ணுலகு |
|---|---|
| 20 | 05 |
| 08 | 09 |
| 1925 | 2003 |

அமரர்

### அப்புத்துரை பரராசசிங்கம்

அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்தி
எம்வாழ்விலும் வளத்திலும்
மகிழ்ச்சி கண்டு வாழ்ந்திட்ட
எம் தந்தையே! உங்கள்
பிரிவைத் தாங்கவொண்ணாது
தவிக்கின்றோம் வழிகாட்டுங்கள்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (23289) (26-11-15)

## கண்ணாபுரத்தில் மர நடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.5

உலக வதிவிட தினமான நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கொட்டடியில் உள்ள கண்ணாபுரம் வீடமைப்புத் திட்டத்தில் மர நடுகை மற்றும் சிறப்புரை என்பன இடம்பெறவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் செ.இராசதுரை அறிவித்துள்ளார். (எ-10)

## மந்துவில் ஊடான பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஒக்.5

நீண்டகாலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள பருத்தித்துறையிலிருந்து வரணி, மந்துவில், வேம்பிராய் ஊடாக சாவகச்சேரிக்குச் செல்லும் பஸ்சேவையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் வட பிராந்திய போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளரைக் கோரியுள்ளன.

இயற்றாலை, மந்துவில் பகுதிகளில பெருமளவு மக்கள் வசித்து வருகின்ற போதிலும் இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் இப்பகுதி மக்கள் தமது தேவைகளுக்காக வரணி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அல்லது மீசாலை புத்தூர் சந்திக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் -

பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டால் வரணி, இயற்றாலை, மந்துவில், வேம்பிராய், சரசாலை, மட்டுவில், நுணாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் விவசாயிகளும் நன்மையடைவர் எனவும் - அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-117)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.5

புங்குடுதீவு பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவும், தொண்டர் கந்தையா திருநாவுக்கரசுவின் 2ஆம் ஆண்டு நினைவுதினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் ப.தயாளந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தீவகம் தெற்கு பதில் பிரதேச செயலர் ப.லோகநாதன் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தெட்சணாமூர்த்தி, சிரான் செயலணியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். இரத்தினம், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-10)

## வீதி கண்காணிப்பில் கல்லூரி மாணவர்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு செல்லும் மாணவர்களின் நலன்கருதி சாவகச்சேரி பொலீஸார் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையில் கல்லூரி மாணவர்களை ஈடுபடுத்தவுள்ளனர்.

இதற்கென ஆறு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பொலீஸாரால் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றிய கருத்தரங்கும், செய்முறையும் நாளை திங்கட்கிழமை கல்லூரியில் நடத்தவுள்ளதாக பொலீஸ் நிலைய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக்றோகித் தெரிவித்தார்.

ஏ-9 வீதியில் உள்ள பாடசாலைகளின் முன்பாக இப்பணிகளில் பொலீஸார் தினமும் காலையும் மாலையும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். (எ-117)


Hotel SEIVAMS

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ்.

01. தனி அறை (Single Room)
02. இருவர் அறை (Double Room)
03. கொமட் வசதியுள்ள மலசல கூடங்கள்
04. குளிரூட்டப்பட்ட அறை (AirCondition Room)

மிகவும் சகாயமான கட்டணத்தில் வாடகைக்குக் கிடைக்கும். இன்றே விஜயம் செய்யுங்கள்:

Hotel SEIVAMS

Guest House, 93, Vivekananda Hill,
Colombo-13, Tel: 326522

(22496)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1946 | 2002 |
| 03 | 10 |
| 27 | 16 |

அமரர் நவரத்தினம் இராசமலர்

திதி: 05.10.2003

அன்பின் அம்மா!
ஆண்டவன் அடி சென்று
ஆண்டொன்று ஆயிற்று
ஆனால் ஆறாது எமது துயர்
நாம் வாழும் காலம்வரை.

மாணிக்கதியாகராசா வீதி,
சுன்னாகம். (23058) குடும்பத்தினர்.

(21-11-15)

## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 16 |
| 07 | 10 |
| 1947 | 1987 |

அமரர்

### கந்தசாமி சண்முகநாதன் (பேபி)

(பாலா விளையாட்டுக் கழக முன்னாள் தலைவர்)

"ஆண்டுகள் பதினாறு ஓடி மறைந்தாலும்
ஆறுமோ உங்கள் நினைவு எம்மைவிட்டு
நாங்கள் இருக்கும் வரை உங்கள்
நினைவு எம்மோடு."

சிராமலிங்கம் றோட்,
உருநெல்வேலி கிழக்கு. - ரஞ்சன் குடும்பத்தினர்.

(23288) (26-11-15)


## ஐக்கிய அரபு இராச்சியத்தில் வெற்றிடங்கள்

| பிரிவு | தொகை | வேதனம் (DHS) |
|---|---|---|
| அச்சுப் பதிப்பகம் சித்திரக் கலைஞர் | 10 | 1000 |
| கட்டட அமைப்பு கூலித் தொழிலாளர் (ஆண்கள்) | 100 | 500 |

வரையறைகளும் நிபந்தனைகளும்:

இலவச வதிவிடம், இலவச வைத்தியம், இலவச உணவு, வேலை ஒப்பந்த காலம் முடிவடைந்தபின் இலவச ஒருவழி விமானப் பயணம்; முன்னர் வழங்கப்பட்ட இரண்டு வருட ஒப்பந்த காலம், இரு பகுதியினரின் சம்மதத்துடன் மேலும் நீடிக்கப்படும்; ஏனைய வரையறைகளும், நிபந்தனைகளும் ஐ.அ. இராச்சியத்தினது தொழிற்றுறைச் சட்டங்களுக்கு அமைவானவை. நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது தங்களது கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு அளவிலான புகைப்படப் பிரதிகள் ஆறு மற்றும் அனுபவ அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்கவேண்டும்.

**Orient Link (PVT) Ltd.,**

இல.12, மக்லியொட் வீதி, கொழும்பு - 04.

(பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டடத்திற்கு முன்பாக பான் (PAN) ஆசிய வங்கிக்கு அருகில்)

அனுமதிப் பத்திர இல: 1170 (சி-30513) (25-11-15) அனுமதி இல. AI/1176/ADVT/03





முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமகன் கு.வன்னிய சிங்கத்தின் 44 ஆம் ஆண்டு நினைவுதின வைபவம் அண்மையில் நல்லூர் பொதுச் சந்தையில் உள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நடை பெற்றது.

அமரர் வன்னியசிங்கத்தின் படத்துக்கு கொக்குவில் ந.அருணாசலம் மலர் மாலை சாத்துவதை முதல் படத்தில் காணலாம்.

அருகில் மன்றத் தலைவர் சி.க.சிற்றம்பலம், ஈழவேந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

பொதுப்பணி மன்றத்தால் தையல் பயிற்சியை முடித்துக் கொண்ட யுவதி ஒருவருக்கு யாழ். மாநகர ஆணையாளர் ஆர்.இராமலிங்கம் சான்றிதழ் வழங்குவதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ஐ)

## மினிபஸ் மோதி இளைஞர் காயம்

தென்மராட்சி,ஒக்.5

சைக்கிளில் வந்த நபரை வேகமாக வந்த மினிபஸ் மோதிவிட்டு தப்பியோடிய சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் நுணாவில கிழக்கில் இடம்பெற்றது.

தலையில் காயமடைந்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த செல்வநாயகம் தர்மேந்திரன் (வயது-23) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-117)

## தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே தொலைத்தொடர்பு

கொழும்பு,ஒக்.5

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையே 'மைக்றோ' அலைவரிசைத் தொலைத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு 'ஸ்ரீலங்கா ரெலிகொம்' நிறுவனமும் இந்தியாவின் பாரியத் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றும் ஒப்பந்தம் செய்துள்ளன.

'ரெலிகொம்' நிறுவன தலைவர் திலங்க சுமதிபாலவும் இந்திய நிறுவனத் தலைவரும் இது சம்பந்தமான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த இணைப்பு அடுத்த ஆண்டுமுதல் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்மூலம் அபிவிருத்தித்துறையில் இந்தியாவுடனான உறவு வலுப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

## பண்ணிசை பயிலும் மாணவருக்கு சீருடை

குப்பிளான் தெற்கு கன்னிமார் அம்பாள் ஆலய நிர்வாகத்தினால் நடத்தப்பட்டுவரும் பண்ணிசை வகுப்பில் பங்கேற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

குப்பிளான் தெற்கில் அமைந்துள்ள கன்னிமார் ஆலய நிர்வாகத்தினர் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றனர். இவ்வகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுவரும் 28 மாணவ மாணவியருக்கே இலவசமாக வேட்டி, சால்வை மற்றும் முழுப் பாவாடை சட்டை ஆகிய பண்பாட்டுச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆலயப் பரிபாலனசபைத் தலைவரும் கிராம அலுவலருமான சோ. பரமநாதனின் முயற்சியின் பயனாக மேற்படி கிராமத்தைச் சேர்ந்த த.சண்முகராஜா, திருமதி.தங்கராசா ஆகியோர் இந்தச் சீருடைகளை கொள்வனவு செய்வதற்கான நிதியை வழங்கியிருந்தனர். (எ-150)

## வெடிபொருள் அபாயம் பற்றி பாடப்புத்தகத்தில் 'ஓர் அலகு'

வவுனியா,ஒக்.5

வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருள்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் வழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வெடிபொருள்கள் அபாயம் பற்றி முதன்முறையாக பாடப்புத்தகத்தில் ஒரு அலகு இணைக்கப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய கல்வி நிறுவகத்தினால் சமூகக்கல்விப்பாடப் புத்தகத்தில் இந்த அலகு சேர்க்கப்பட்டுள்ளது. இதில் வெடிபொருள் என்றால் என்ன? அது எவ்வாறு இருக்கும்? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தினை மாணவர்களுக்கு விநியோகிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 'யுனிசெவ்' நிறுவனம் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் கல்வித்துறைப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-10)

## வலி.மேற்கில் நெல்விதைப்பு ஆரம்பம்

சண்டிலிப்பாய்,ஒக்.5

வலி.மேற்கு மற்றும் வலி.தென்மேற்கு பகுதிகளில் இவ்வாரம் பெய்துள்ள பலத்த மழையை அடுத்து விவசாயிகள் பெரும் போக நெல் விதைப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை - மாதகல் பாணாவெட்டி குளத்தின் சுற்றாடலில் புதைகப்பட்ட மிதிவெடிகள் இதுவரை அகற்றப்படாதுள்ளதால் இம்முறையும் தங்கள் வயல் காணிகளில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதிருப்பதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஏ-135)

## தெல்லிப்பழை சுகாதார பிரிவில் மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

வலி.தெற்கு,ஒக்.5

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி இம்மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏற்றப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்தத் தடுப்பூசி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே முதன்முதலாக ஏற்றப்படவுள்ளது என்றும் -

பெரும்பாலும் பன்றிகளால் பரவும் நோயெனக் கருதப்படும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய், யாழ். மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் பன்றிகளின் பெருக்கத்தால் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதை அடுத்தே குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்றும் - கூறப்பட்டது.

முக்கியமாக 21.10.2000ஆம் திகதியில் இருந்து 21.10.2002ஆம் திகதிவரையான காலப்பகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பூசி கட்டாயமாக ஏற்றப்படவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் நிலையங்களில் அன்றைய தினம் குறிப்பிடப்படும் காலப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளது.

* தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை - மல்லாகம், தெல்லிப்பழை கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு.
* அளவெட்டி மத்திய மருந்தகமும மகப்பேற்று வைத்தியசாலை - அளவெட்டி, பன்னாலைக் கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு.
* சுன்னாகம் மத்திய மருந்தகம் - சுன்னாகம், கந்தரோடை கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு.
* ஏழாலை மத்திய மருந்தகம் - ஏழாலை கிராம குழந்தைகளுக்கு.
* இணுவில் மத்திய மருந்தகம் - இணுவில், தாவடி கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு.
* புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் - புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினை கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு.
* உடுவில் மத்திய மருந்தகம் - உடுவில், சங்குவேலி கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு. (எ-152)





கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவன் செ.செந்தில்வேலால் வடிமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை முதல் படத்திலும் -

அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் கலாசாலை அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியர் செ.செந்தில்வேல் தம்பதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ம-10)

# சஞ்சிகையாளர்-படைப்பாளிகள் ஒன்றிணைவது அவசியமானது

## சிறுசஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு இதுவே வழி

**ந.சத்தியபாலன்**

தமிழில் இப்போதெல்லாம் பல திசைகளிலிருந்தும் புதிது புதிதாய் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எழுதும் ஆர்வமும், திறனை வெளிக்காட்ட வேண்டுமென்றும் உந்துதலும் எழுதத்தூண்ட வேண்டும் என்கிற அக்கறையும் தத்தம் பிரதேசம் சார் கலைஞர்களை கலைகளை வெளிக்கொணரும் முனைப்பும் கொண்டு ஆங்காங்கே உழைக்கிறவர்களின் இந்த நல்லியல்பை முதலில் மனதார வாழ்த்தி வரவேற்க வேண்டும்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் வெளியிடப்பட்டு வருகின்ற சமூக, கலை, இலக்கிய சஞ்சிகை "மாருதம்" இதுவரை மூன்று இதழ்களைக் கண்டுள்ளது. படித்துப் பார்க்கிறபோது பாராட்டுக்குரிய பல அம்சங்கள் பல வெளித் தெரிவதைச சொல்லியாகவேண்டும். மூன்றாவது இதழில் முல்லைமணி அவர்களின் 'வன்னி மண்ணின் நவீன இலக்கிய அடையாளம்' என்னும் கட்டுரை 'நிலக்கிளி' நாவல் பற்றிய ஒரு பார்வையாக எழுதப்பட்டுள்ளது. பல அம்சங்களாலும் ஈழத்து நாவல்களுக்குள் தனித்துவம் பெறுகின்ற இந்த நாவலின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர்.

மிக முக்கியமான இன்னோர் அம்சம் எமது நாட்டின் கலைகளில் அக்கறையோடு - உழைத்து வருகின்ற ஒரு கல்விமானை முறையுறக் கௌரவித்து அவரது அட்டைப் படத்துடன் தரப்பட்டிருக்கும், பேராசிரியர் மௌனகுரு. அவர்கள் குறித்த கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் கட்டுரையாகும். எமது தேசத்தின் மரபுக் கலைகளில் ஈடுபட்டு உழைப்பைச் சொரிந்து அவற்றைப் பேண உழைக்கும் கல்விமான் ஒருவர் என்கிற வகையில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் முக்கியத்துவம் பெறுகிறார். அவரால் புதுப்பிக்கப்பட்டு அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலா மன்றத்தினரால் நடத்தப்பட்ட 'இராவணேசன்' கூத்துக்களின் புத்துயிர்ப்பூட்டல் நடவடிககையில் முக்கியத்துவம் பெறுகிறது. கவிதை, சிறுகதை, கட்டுரை, பாடல் எனப் பல்துறைப்பட விரிந்திருக்கும் இலக்கியத் துறைகளில் காட்டப்படும் அக்கறை காரணமாக இந்த அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு ஆக்கங்களைப் பிரசுரித்துள்ளமை பாராட்டுக்குரியது.

ஈழத்தின் பழம்பெரும் நாடகக் கலைஞர் எஸ்.திருநாவுக்கரசு அவர்களை நாடக ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' நாடகம் இன்னும் மனதில்- நிழலாடுகிறது. அதில் 'அரசு' ஐயா ஏற்ற பாத்திரத்தையும் நடிப்பையும் எவரும் இலேசில் மறந்துவிட முடியாது. அதுபோலவே நாடகத்துறையின் பிரதானத்துவம் மிகுந்த படைப்பாளியும் கலைஞருமான குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களது 'எந்தையும் தாயும்' நாடகத்தில் அரசு ஐயா வகித்த பாத்திரம் என்றும் பசுமை கொண்டு திகழ்கிறது. அத்தகைய ஒருவரின் நேர்காணலை (IBCயில் ஒலிபரப்பானது) மீள தந்திருப்பதன் மூலம் சரியான அடையாளப்படுத்தல் ஒன்றினை 'மாருதம்' சஞ்சிகை நிகழ்த்தியுள்ளது.

இதுபோலவே ஏனைய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. மேற்சொன்ன விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் படைப்பாளிகளின் கூர்ந்த கவனிப்பு மேலும் செலுத்தப்பட்டிருக்கலாமோ என்று எண்ணத தோன்றுகிறது. (பட்டிருக்கலாமே) குறிப்பாக கவிதைகள் மேலும் படைப்பாளியின் உழைப்பைக் கோருவனவாக செம்மை வேண்டி இறைஞ்சும் தன்மை கொண்டவனாக அமைந்திருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

ஒரு படைப்பு பிரசுரமானால்போதும் என எண்ணி விடும். சிறுபிள்ளைத்தனமான திருப்தியோடு அமைந்து விடுகிறவர்களாகப் படைப்பாளிகள் இருக்கக் கூடாது. தனது மதிப்பு - தனது படைப்பின காப்பாற்றப்பட வேண்டும் என்ற அக்கறை ஒரு படைப்பாளிக்கு அவசியம். விமர்சனத்துக்குரிய வேறு தன்மைகள் இருப்பது தவறல்ல. படைப்பின் குறைபாடு சுட்டிக்காட்டக் கூடியதாய் அமையுமெனில் அக்கறை போதாதிருப்பதாகத்தானே பொருள்?

ஈழத்தின் கவிதைத்துறை ஒரு பெருமிதத்துக்குரிய மட்டத்தில் இருப்பதனை, கணிப்புத் தோன்றி வருகிற இந்தக் காலகட்டத்தில் இத்தகைய படைப்பாளிகளை மேலும் தெளிவுபடுத்தும் காரியத்திலும் 'மாருதம்' ஈடுபட்டால் நன்று.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது மாருதத்தில் இன்னும் இனிமைதேவை என்றே படுகிறது. படைப்புகளின் காத்திரமான தன்மை குறித்துப் படைப்பாளிகளும் பிரசுரிப்போரும் கவனம் செலுத்துதல் அவசியமாகிறது. இந்த அளவிலாவது இருக்கிறதே என்று திருப்தி கொண்டு ஓர் ஆக்கத்துக்குப் பிரசுர அந்தஸ்து தரும்போது படைபபாளி ஊக்குவிக்கப்படுகிறார் என்ற நியாயம் முன்வைக்கப்பட்டாலும், அதுவே மேதாவித்தனம் என அவ்களை கொண்டு விடுவதும் அத்தகைய படைப்புகளையே தொடர்ந்து தருவதுமான தவறுகள் நேர்ந்து விடவும் முடியுமே என்பதால் பிரசுரத்துக்குப் படைப்பைத் தெரிவுசெய்யும்போது கவனம் கொள்ளுதல் அவசியமாகின்றது.

ஒரு சஞ்சிகையில் தரம் போதாதிருக்கிறது என்னும் குறை முன்வைக்கப்படும் போது படைப்புகள் தரமாக இருந்தால் தானே பத்திரிகை தரமாக இருக்கும். குறைபடுகிறவர்கள் தாங்களாவது தரம் மிக்க படைப்பைத் தரலாமே என்ற கோரிக்கை சஞ்சிகை மற்றும் பத்திரிகையாளரிடம் தோன்றுவது தவிர்க்க இயலாதது. எழுதுகிறவர்கள் அக்கறையாகப் படைப்புகளைத் தருதல் அவசியமல்லவா? எனவே சஞ்சிகையாளர்களும் படைபபாளிகளும் தமக்கிடையேயான ஒத்துழைப்பை விருத்தி செய்யவேண்டிய தேவையும் உள்ளதே.... சங்கர செல்வியின் கவனிப்புகளுக்கு உட்பட்டு வெளிவந்துள்ள கலை இலக்கிய கருத்துக்கள் மனங்கொள்ள வேண்டியவை. அவரது பணி தொடர்க.

சாந்தனின்'கடுகுகள்' ஆங்காங்கே இருந்து சுவை கூட்டும் தன்மையும் பாராட்டுக்குரியது.

'மாருதம்' தொடரட்டும் ரசிகர்களும் படைப்பாளிகளும் மாருதத்தின் வளத்துக்கும் மணத்துக்கும் துணை செய்வார்களாக. ❋

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கனகசபாபதி மயூரன் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் வல்லிபுர ஆழ்வார் கோயில் வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கனகசபாபதி, குளுக்கண்டி லேன், கட்டப்பிராய், இருபாலை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (23307)

## விற்பனைக்கு

R.L.தொலைபேசி இணைப்புக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:-தபிரதீபன், பக்கஸ் லேன், மானிப்பாய். (23285)

நல்ல நிலையிலுள்ள L.G. சலவை இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.நடராஜா, 73/1, கலட்டி அம்மன் தெரு, வண்.வட கிழக்கு, யாழ்ப்பாணம். (23234)

Sony, National T.Vகள் (14", 19", 20", 21",25",29") Video Deck, செற்றப் செற்கள் (Pineor, Kenwood) சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. (ஒரிஜினல் ஜப்பான்) தொடர்பு: 150, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (23108)

## வீடு, காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் கோயில் றோட்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மையமாக சிறந்த இடத்தில் அமைந்துள்ள 19 பரப்புக் காணி (2கிணறு) 5 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைககுண்டு. தொடர்பு: T.நடேசன், வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு. T.P, 222 3831 ஜேர்மனியில்-0049684174880. (23311)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pinscher, Great Dane குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(23274)

## திருமண சேவை

1958, அச்சுவினி, செவ்வாய்1, பாவம் 60, M.Sc. Computer Engineer U.K., சைவபோசன மணமகனுக்கு 1965இற்குப் பிந்திய படித்த மணமகளும் 1978, விசாகம், கணக்காளர், Australia மணப்பெண்ணுக்குப் படித்த மணமகனும் தேவை. இருவருக்கும் Sponcer உண்டு. தொடர்புகளுக்கு: துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (23192)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 29 வயது, எம்.பி.பி.எஸ். டாக்டருக்கு பெற்றோர் அடக்கமான, பண்பான, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். புகைப்படம், ஜாதகக் குறிப்பு உட்பட பூரண விபரங்களுடன தொடர்புகொள்ளவும். பொருந்தமற்றவை கண்ணியமாக திருப்பி அனுப்பிவைக்கப்படும். விள.இல. 2065, மே/பா உதயன். (23312)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 9-11 வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ, தபால் மூலமோ கற்பிக்கப்படும். சுயவிபரங்களுடன் திரு. கு.இரத்தினராசா, "சுந்தரபவனம்", சண்டிலிப்பாய் தெற்கு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (23303)

## விற்பனை உதவியாளர் தேவை

பிரபல வர்த்தக தாபனம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.

தொடர்புகட்கு:-
தி.சற்குணராசா ஐயா
சதுர்த்திகா களஞ்சியம்
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

## தேவை

நகைக் கடைக்கு நகைத்தொழிலில் நன்கு அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு:
க.சுந்தரலிங்கம்
முகாமையாளர்,
ராஜா தியேட்டர்.
T.P. 222 2318
(23301) (26-15-19)

## தவறிவிட்டது

SAM SUNG மொடல் கையடக்கத் தொலைபேசி ஒன்று கடந்த 14.09.2003 அன்று மாலை 5.00 மணிக்கும் 5.25 மணிக்கும் இடையில் முகமாலை விடுதலைப் புலிகள் சோதனைச்சாவடிக்கும் இராணுவ சோதனைச்சாவடிக்கும் இடையே பஸ் பயணத்தின்போது தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள்:-

அதிபர்,
யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை

என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (23306)

உ

## கௌரிநோன்பு

வியாபாரிமூலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளிதேவி சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் இன்று (05.10.2003) ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரை கேதாரகௌரி விரதப் பூஜை காலை 9மணிக்கு நடைபெறும். கௌரிநோன்பு நூல் பெறும் அடியார்கள் தேவஸ்தானத்தில் தங்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரம்மஸ்ரீ சி.வாசுதேவக்குருக்கள்
(தேவஸ்தான பிரதமகுரு)
(C-30534) (21-19-15)

# கண்ணீர் அஞ்சலி



## செல்வி A.கார்த்திகா

(வர்த்தகம் 2ஆம் வருடம்)

03.10.2003 அன்று அகாலமரணமான செல்வி A.கார்த்திகா அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(23309) (21-15-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
15 - 12 - 1935



மறைவு
05 - 09 - 2003

## அமரர் முத்துவேலு பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.)

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி,
நவிண்டில்.
(23310) (26-15-19)

- மனைவி. மக்கள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
சகோதர சகோதரிகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 - 12 - 1968



ஆண்டவன் அடியில்
15 - 10 - 2002

திருமதி
## சூரியஜீவன் குகானந்தி
(ஆனந்தி)

கலையுடையாய் நற்கவின் உடையாய் கதைப்பவர்
காதுக்கிதம் செய்யும் நற்சொல்லுடையாய்
தலைமகளே எம் தவமகளே மனமெல்லாம் ரணமாக்கி
மாறாத பீத்து நிலையமக்காக்கிக் காலனுடன் போன
நிலை மொறுக்கலையே... இனியுன்னைக் காண்கின்ற
இன்பநிலை வருமோ.... அம்மா...... ஓராண்டான
நிலை தன்னில் ஆறாத காயமொடு உன் நினைவின்
ஈரத்தில் வாழ்கின்றோம்..... நீ வருவாய் எம் மகளே!

இல.11 3ஆம் குறுக்குத் தெரு.
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

உன்பிரிவால் நிதம் வாடும்:
கணவர், அப்பா. அம்மா,
சகோதரர்கள்.
(23304)

# பாராட்டு நிகழ்வு



## திரு. சிறில் சுகந்தரன் (அதிபர்)

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு நவாலி தெற்கைச் சேர்ந்த மக்களாகிய நாம் அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இன்று (05.10.2003) ஞாயிறு விஜயதசமி நாளில் அவருக்கு பாராட்டு விழாவும் நடத்துகின்றோம்.

நவாலி தெற்கு. (23197) (21-19-15) - விழாக்குழுவினர்.

# விற்பனையாகிறது

**G.C.E. O/L English**
**6 MODEL PAPERS WITH ANSWERS**
by: **S.THEIVATHAVAPALAN**

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்பு:- விலை ரூ.150

**LANKA BOOK DEPOT**
F.L.I.14,DIAS PLACE, COLOMBO - 12.
Tel.341942
(C30522) (21-14-15)

# பிறந்தநாள் வாழ்த்து




## செல்வி தி.அபிராமி

வடமராட்சி, மாலிசந்தியைச் சேர்ந்த

திருமாறன்-தனுஜா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்வி அபிராமி தனது எட்டாவது பிறந்தநாளை இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார். அபிக்குட்டியை அன்பான அப்பா, அம்மா மாலிசந்தியில் வசிக்கும் அன்பான அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் அன்பான மாமா சுதர்சன், அன்பான அத்தை கௌசல்யா, அன்பு மச்சாள் சுருதிகாகுட்டி, சுவிஸில் வசிக்கும் அன்பான அன்ரா அமுதா, அன்பு சித்தப்பா குகன், அன்புத் தங்கை ரககவிகுட்டி, நிரோஷன் மாமா, நிலானி சித்தி, ஜெனாக்குட்டி மாமா, புத்தூரில் வசிக்கும் பூட்டி, பதிரியில் வசிக்கும் துரைராசா தாத்தா, அன்பான புஷ்பராணி அம்மம்மா, துஷா அன்ரா, சுபா சித்தி, மாமாமார் ராஜித், ராம்கித் மற்றும் சுவிஸில் வசிக்கும் அன்பு பெரியப்பா பவா, அன்பு பெரியம்மா நேஜினி, தம்பிமார் றொபாஸ் குட்டி, றொபிற்குட்டி, ஜேர்மனியில் வசிக்கும் அன்பு சந்திரதாஸ் சித்தப்பா, அன்பான ரோமி சித்தி, தம்பி நிர்ஜைன் குட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறார்கள்.

'புஸ்பபவனம்', மாலிசந்தி,
நெல்லியடி கிழக்கு.

தகவல்:
வை.புஸ்பமலர் (அம்மம்மா).
(சி-30535) (25-21-15-19)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
06 - 03 - 1924



உதிர்வு
21 - 08 - 2003

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும்
கஸ்தூரியர் வீதியை வசிப்பிடமாகவுள்ள

## அமரர் டாக்டர் ஆறுமுகம் முருகேசு

காலமெலாம் எமக்காக வாழ்ந்துநின்ற உத்தமரே
ஞாலமதில் நின்பிரிவு ஈடுசெய்ய முடியாதய்யா
வைத்தியராய் நீர்வாழ்ந்து ஊர்போற்ற மருந்தளித்து
அன்புடனே ஆறுதல்கூறி உமக்குள்ளே பூரித்துபோவீரே!

ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தென்ன ஐயா
அன்னமிட்ட கைகளுக்கு அரிசியிட மறந்தாரோ உமக்கு
யாரிடம் போய் அழுவோம் யாரிடம் போய் முறையிடுவோம்
கண்கலங்கி நின்று தவிக்கின்றோம் ஓடிவர மாட்டீரோ?

ஆறாத உமது மனக்காயத்திற்கு முருகன் திருநாளில் அவனிடம்
மருந்து பெறவா ஆலமுண்டு அவசரமாய் நீர் விரைந்தீர்
எமைக்காக்கும் நல்லூரான் உமக்கு என்றும் சாந்தி தந்து
பேரின்ப பெருவாழ்வு தர இறைஞ்சுகின்றோம் என்றென்றும்.

இன்று (5-10-2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியை வைபவத்திலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சவனப்பதி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

அன்புடன் மருமகன்.
மகள். பேரன் (பாலா)
கொழும்பு - 06
(C/30465) (11-15)

| | ரா. | | சனி |
|---|---|---|---|
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கே. | சூ. வெ. ▲ பு |

# இந்த வார இராசி பலன்

## 05.10.2003 - 11.10.2003

### மாற்றம்:

05-10-2003 இல் திருவோணம் - மகரராசியில் சந்திரன் நிற்கும். 06-10-2003 இல் துலாமில் - வெள்ளி மாறும்.

காலம் கடந்தால் கருத்துக்கள் மாறலாம். மனமில்லாத நிலை. அரசியல் சாணக்கியம் எனக் காலம் கடத்துவது எதற்காக என எல்லோரும் யோசிப்பார்கள். உலக நாடுகள் வலுவான ஆலோசனை வழங்கும். அதை ஏற்காத நிலை. இது இன்றைய அரசியல் நிலை தடுமாறும் காலம். சமாதான அவலங்கள் ஏற்படும். தேக்க நிலை தொடரும். இந்தியாவில் வன்முறைகள். மத்திய கிழக்கில் வன்முறை அதிகரிக்கும். இந்து சமுத்திரம் பசுபிக் பிராந்திய நாடுகளில் அமுக்க நிலை தோன்றி மழையால் அழிவுகள் ஏற்பட இடம் உண்டு என்று கிரகநிலைகள் காட்டுகின்றது.

### மேடம்

மனப்புகைச்சல்களால் உடல் பாதிப்பு, வயிற்றுநோ, முழங்கால் எரிவு, அதிகவேலை, அலைச்சலும் அடிக்கடிவரும். பொருள்வரவு, நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தூரதேசப் பிரயாணம் தடைப்படலாம். நரம்புத்தளர்ச்சி வர இடம் உண்டு. வியாபாரிகள், தரகு வேலை, கட்டடத் தொழில் செய்பவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி, சனி*

### இடபம்

குருவும், செவ்வாயும் கேந்திரமேறி இருப்பதனால் காணி பூமியில் மாற்றம் வரும். புத்திருக்கும், சகோதரர்களுக்கும் நன்மைகள் கிடைக்கும். கடும் சொற்களால் வீண்பகைவரும். கால், கைவருத்தம், வாய்வுத் தொல்லை, பூச்சித் தொல்லை வரும். குளிரால் வருத்தங்கள் வந்து போகும். இடமாற்றம் வரலாம். குருத்தொழில், சந்தை வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி, சனி*

### மிதுனம்

கடுமையான சொல், நேர்மையான மனம், செயற்பாட்டில் உறுதி என்பன இருக்கும் காலமாகும். காலில் வாதம், விறைப்பு காட்டும். சகோதரர்களுக்கு உதவிகள். அரசியல் தொடர்புள்ளவர்கள் உதவிகள் செய்வார்கள். ரீ.வி, செய்தி சினிமாத்துறைகளில் ஈடுபாடுள்ளவர்களுக்கு அதிக இலாபங்கள் கொடுக்கும். திருடர் பயம் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி, சனி*

### கடகம்

அட்டமத்தில் நெருப்பன் வந்து நிற்பதனால் விசாரணைகள் வந்து போகும். தொழில் ஸ்தானத்தில் மனக்கருத்து வரும். இடமாற்றங்கள் நன்மை தரும். அரசியல்வாதிகள், குருத்தொழில் செய்பவர்களுக்கு வருமான அதிகரிப்பு ஏற்படும். தூரதேசத் செய்தி ஒன்று வந்து மனத்தை வாட்டும். அயலவர்கள் வீண்தொல்லைகள் தந்து மன வேதனைவர இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி*

### சிங்கம்

உதயத்தில் உத்தமனாம் வியாழன் நிற்பதனால் பெரியவர்களில் உதவிகள் கிடைக்கும். பொருள்வரவு எற்படும். ஆலயவழிபாடு செய்தல், வாகனத்தால் செலவுகள், அடிக்கடி கோபம் வந்து போகும். இனஜன உதவிகள் கிடைக்கும். குருத்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### கன்னி

வீட்டைப் பற்றி அதிக சிந்தனை கொடுக்கும். தந்தை வழியில் வீண் பழி வந்து சேரும். ஆஸ்பத்திரி செலவுகள் கொடுக்கும், நாரி நோ, வாய்வுத் தொல்லை கொடுக்கும். உதவிகள் வரும். தொழில் ஸ்தானங்களில் ஒரு மந்தநிலை ஏற்பட்டு வேதனை தரும். செய்தி தொடர்பாளர்கள், ஆசிரியர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

பிரயாணச்சிந்தனை அடிக்கடி வரும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். வருமானம் அதிகரித்தபடி இருக்கும். பெரியவர்கள், பதவி உயர்ந்தவர்கள் நன்மை செய்வார்கள். இடமாற்றங்களால் நன்மைவரும், கால்வருத்தம், நாரி நோவரும். கொடுக்கல் வாங்கலால் கோபித்தபடி இருப்பீர்கள். சட்டத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

விசாரணைகள் தேடிவரும். துன்பங்கள் வந்து இடமாற்றங்கள் கொடுக்கும் நிலை ஏற்படும். அயலவர்கள் உதவிசெய்வர். புத்திரர்கள் அல்லது சகோதரங்களுக்கு நன்மைகள், மாற்றங்கள் ஏற்படும். தூரத்துச் செய்தி வரும். கோயில் எனப்போய் வருவீர்கள். புதியநண்பர்கள் உதவுவார்கள். கால் உளைவு வரும். வியாபாரிகள், சட்டத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி*

### தனுசு

அடித்து அணைக்கும் கை உங்கள் கை. அடிக்கடி கோபித்தாலும் ஆதரவு பிறருக்கு கொடுத்தபடி இருப்பீர்கள். தூரத்துச் செய்திகளால் நன்மைகள் கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும். கைகால் உளைவு கொடுக்கும். வாதம், விறைப்பு தரும். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் வரும். பணவருவாய் தேடிவரும். சகோதரவழி உதவிகள் கிடைக்கும். செய்தித் துறையினர், வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி*

### மகரம்

ஊக்கத்தால் மாற்றங்கள் வரும். தடைதாமதம் வந்து வந்து போகும். பொருள் இழப்பு அல்லது செலவுகள் அதிகரிக்கும். மனக்குழறல் அடிக்கடி வரும். வீடுமனைச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். வாய்வு வருத்தம், சளித்தொல்லை, இருமல் தடிமல் கொடுக்கலாம். கடல் தொழில், பிரயாணத் துறை, வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

திட்டமிட்ட செயற்பாடு. வாக்குமாறுதல். புதியன வருதலும் பழையான கழிதலும். நண்பர்கள் உதவி செய்வர். பணவருவாய் சுமாராக இருக்கும். கால் வருத்தம், சளித்தொல்லை, நெஞ்செரிவு வரும். பிரயாணம் தடைப்படும். சகோதரர் கோவிப்பார், குருத்துறையினர், வியாபாரிகள், சட்டத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

பரபரப்பான காலம். இனஜன உதவி கிடைத்தல். பொருள்வருவாய், புகழ், பொறுப்பு நிற்றல், தொழிலில் புதிய திட்டங்கள் வழிவகுத்தல், இடமாற்றங்கள் ஏற்படல். வரவுக்கு மீறிய செலவுகள் வரும். தெய்வ வழிபாடும், பிரயாணசுகமும் ஏற்படும். கால்வருத்தம், சலத் தொல்லை வரலாம். பிரயாணத்துறை, கடல்தொழில், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# ஆளுமையின் சிகரமாகிய அதிபர்

ஆழமானதும் நீண்டதுமான புகழ் பூத்த கல்விப் பாரம்பரியத்தை கொண்ட யாழ்ப்பாணம் ஆளுமை மிக்க ஆசிரியர்களை, அதிபர்களை, மனிதர்களை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கும் பூமி. பெருமைகள் சேரும் பெரும் பதவிகளை விட அலங்காரம்தரும் அரசியல் தலைமைகளை விட ஆட்டிப் படைக்கும் வல்லமை மிக்க அதிகாரப்பதவிகளைவிட ஆசிரிய - அதிபர் பதவிகள் ஒரு பக்குவமான சமூகத்தை உருவாக்கும் சக்திமிக்கது.

ஒறேற்றர் சுப்பிரமணியம் சுன்னாகம் ஸ்கந்தவரோதய, பூரணம்பிள்ளை (பருத்தித்துறை ஹாட்லி மற்றும் யாழ். சென்ஜோன்ஸ்), சபாலிங்கமும் சபாரத்தினமும் (யாழ்ப்பாணம் இந்து), முத்துவேற்பிள்ளையும், பேரம்பிரவரும் (மானிப்பாய் இந்து). அம்பிகைபாகன் (வண்ணை வைத்தீஸ்வரா) என தடம் பதித்த யாழ்ப்பாண அதிபர்கள் வரிசையில் முத்திரை பதித்த ஒருவராய், ஆளுமையின் சிகரமாய் திகழ்ந்தவர் பலாலி அரசின் கலாசாலை முன்னாள் அதிபர் இளையதம்பி கனகலிங்கம். யாழ்ப்பாணம், வந்தமடத்தைச் சேர்ந்த இளையதம்பி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனாய், யாழ். இந்து முன்னாள் அதிபர் அமரர் இசபாலிங்கத்தின் சகோதரனாய் இம்மண்ணில் 1925இல் பிறந்த கனகலிங்கம் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலை - உயர் கல்வியை யாழ் - இந்துக்கல்லூரியிலும் பெற்று சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டு விஞ்ஞானமாணி ஆயினார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி மேற்படிப்பு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார்.

கல்வியில் சிறப்புடன் தேறிய காலகட்டத்தில் விளையாட்டிலும் தனது முத்திரையை பதிக்கத் தவறவில்லை கனகலிங்கத்தார். சிறந்த பந்து காப்பாளராக உதைபந்தாட்டத்தில் பெயர் பெற்றார். அதேபோல துடுப்பாட்டத்துறையிலும் சிறப்பான விக்கட் காப்பாளராக கடமையாற்றிட யாழ் இந்துவின் சாதனைகளுக்கு வித்திட்ட பெருமை அவருக்குண்டு. இவரின் விளையாட்டுத்துறைச் சாதனைகள் அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றிலும் வெளிப்பட்டன. 1940களில் யாழ். இந்துவின் வெற்றிகளுக்கு (ஒரு கோலையும் தவறவிடாது) காரணமான பந்துக்காப்பாளர்



கனகர். 1945இல் சென்னையிலும் 1947இல் லாகூரிலும் சென்னைப்பல் கலைக்கழக குழுவின் பந்துகாப்பாளராக செயற்பட்டு அதன் வெற்றிக்கு உறுதுணையாக நின்றார். கல்வி கற்றலின் தொடர்ச்சியில் ஆசிரியப் பணியில் அமர்ந்து, அரியாலை ஸ்ரான்லி கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி தன் சமூகப்பணியை தொடங்கினார். அதிபராகப் பதவியுயர்வு பெற்று மட்டக்களப்பு வந்தாறு மூலை மகாவித்தியாலயம், உசன் மகாவித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி, யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி, கொக்குவில் முத்துத்தம்பி வித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி என்பவற்றில் பணிபுரிந்தார். தொடர்ந்து 1974 முதல் பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபராகவும் 1979 முதல் அதிபராகவும் கடமையாற்றி 1985 இல் ஓய்வுபெற்றார்.

தமிழ்ச் சமூகத்தில் பண்பாட்டு அம்சங்களைப் போற்றிப் பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டு கனகலிங்கம் கலாசாலை வளவில் ஒரு பிள்ளையார் கோயிலை அழகுற அமைத்ததோடு, பல்வேறு சமயப் பிரார்த்தனைகளுக்கும் இடவசதிகள் ஏற்படுத்தித் தந்தவர். நல்லூர்கந்தனிடம் தீராப்பக்தி கொண்டவர்.

1979 முதல் 1985இல் ஓய்வுபெறும் வரை பலாலி ஆசிரிய கலாசாலையை அவர் நிர்வகித்த பாங்கு அவரை அதிபர் ஆளுமையின் சிகரமாக எண்ண வைக்கின்றது. திடகாத்திரமான உருவம் சிவந்தமேனி, மென்மையான நடை, மெல்லிய புன்முறுவல், சந்தடியற்ற பேச்சு, கண்டிப்பான பார்வை, ஆரவாரமற்ற போதனைகள் இத்தனையும் நிறைந்தவர் கனகர். மாணவர்களின் திறன்களை இடம் அறிந்து தட்டிக் கொடுக்கும் மனப்பாங்கு கொண்டவர். வசாவிளானில் பரந்து கிடந்த செம்பாட்டு நிலப்பரப்பில் நடுவில் மைதானமும் சுற்றிவர கட்டடங்களும் கொண்ட கலாசாலையும், மைதானத்தை சுற்றி நின்ற நிழல்தரும் சின்னஞ்சிறிய விலாட் மாமரங்களும், வேப்பமரங்களும், வீதியோரம் அமைந்த விரிவுரை மண்டபங்களும், முகப்பில் காணப்பட்ட அரங்கும் அமைதி காக்கும் அதிபர் கனகரின் மென்மையான நடை கண்டால் விளையாட்டு மைதானம் அவர் கண்ணின்மணியாகும். குறுக்கே யாரும் சென்றால் கண்டனக்கணைகள் வீசிவிடுவார் அதிபர். இதை அறிந்தவர் பலர், அறியாது கணைகள் பெற்றவர் சிலர்.

அது ஒருகாலம் ........

இன்று அந்த வசாவிளான் மண்ணில் கலாசாலையும் இல்லை இன்று கனகரும் இல்லை.

***கந்தையா ஸ்ரீகணேசன்***
*விரிவுரையாளர்*
*யாழ். பல்கலைக்கழக*
*வவுனியா வளாகம்*

## நீத்தார் நயப்புரை

### சுன்னாகம் பகுதி கடைகளில்

# உலர் உணவுப் பொருள்களின் சுத்தம் பேண வலியுறுத்து

வலி.தெற்கு.ஒக்.5

பலசரக்குக் கடைகளில் விற்பனை செய்வதற்கென வைக்கப்பட்டிருக்கும் உலர் உணவுப்பொருள்களை எலிகள், பூச்சிகள் போன்றவை தீண்டாமல் பாதுகாப்பான முறையில் வைத்திருக்க வேண்டும் என சுன்னாகம் நகரத்திலுள்ள கடை உரிமையாளர்களுக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து விடுக்கப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுமக்களின் பாவனைப் பொருள்களான அரிசி, சீனி, மா, ரவை போன்ற உலர் உணவுப் பொருள்களைப் பாதுகாப்பற்ற முறையில் திறந்த நிலையில, வைத்திருப்பது சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிப்பதாக அமைகின்றது.

இவற்றின் மீது எலிகள், பூச்சிகள் போன்றன இலகுவாக புகுந்து உணவுப் பொருள்களை அரித்தும் எசங்கள் இட்டும் அவற்றை பழுதடையச் செய்கின்றன.

இதன் காரணமாக பொருள்களை உண்பவர்களுக்கு பல்வேறு வகையான நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

எனவே, உணவுப் பொருள்களை ஜீவஜந்துகள் தீண்டாமல் பாதுகாப்பான முறையில் பிளாஸ்ரிக் போத்தல்கள், பெட்டிகள் போன்றவற்றில் அடைத்து வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதற்கு வர்த்தகர்களுக்கு ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் -

அதன்பின் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின்போது பாதுகாப்பற்ற முறையில் பொருள்களை வைத்திருக்கும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.(எ-152)

# லெப். மாலதி நினைவு தினத்தன்று கோப்பாயில் விசேட நிகழ்வுகள்

வலி.கிழக்கு.ஒக்.5

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட பெண் போராளி லெப். மாலதியின் 16 ஆவது நினைவுதின நிகழ்வு கோப்பாயில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ளது.

கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள மாலதியின் நினைவாலயத்தில் அன்றையதினம் மாலை 5 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும் என நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

நினைவாலயத்தில் பொதுமக்களும் போராளிகளும் அஞ்சலி செலுத்துவர். தொடர்ந்து, கோப்பாய் வடக்கு ஞான பண்டிதர் சைவ அபிவிருத்திச் சபை கலையரங்கில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

இறுதி நிகழ்வாக வன்னி - யாழ். கலைஞர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மேற்படி நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வன்னி உட்பட வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் மாலதியின் நினைவு தினத்தை எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி கைதடிப் பகுதியில் இருந்து கோப்பாய் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இந்திய படையினரை எதிர்த்துப் போராடி இவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர் என்பது தெரிந்ததே. (ஏ-180)

# உலக உணவு தினத்தை முன்னிட்டு விவாதப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.5

உலக உணவு தினத்தையொட்டி ஐநா.உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் 'பட்டினிக்கெதிராக சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து செயலாற்றப் பாடுபடல்' என்னும் தலைப்பிலான விவாதப்போட்டி நடத்தப்படவுள்ளது.

தனியார் மற்றும் அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையில் ஒரு பிரிவாகவும் -

வலது குறைந்தோர் கற்கும் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இன்னொரு பிரிவாகவும் போட்டிகள் நடைபெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி 19 வயதுக்கு மேற்படாத மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குகொள்ளலாம். ஒரு குழுவில் நால்வர் இடம் பெறுவர். மேலதிகமாகவும் ஒருவர் இடம்பெறலாம்.

விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 10ஆம் திகதியாகும் 'இயக்குநர், உலக உணவுதின ஏற்பாட்டுக்குழு தபெ இல. 205, கொழும்பு' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-10)

**SPOKEN ENGLISH**

THE ROYAL COLLEGE OF 426(302), K.K.S. Rd, JAFFNA "SPOKEN ENGLISH" புதிய பிரிவு ஆரம்பம்.
சனி, ஞாயிறு 5 p.m.

BY: விக்னேஸ்வரன் ஆச்சாரி (23320)

**SIVA ENGLISH ACADEMY**

ஆங்கில வகுப்புக்கள் } G.C.E.[O/L,A/L], G.A.Q, B.A (I).
50 மணித்தியால விசேடதுரித ஆங்கிலம்
ஆரம்பம் { 14.10.2003, செவ்வாய் 10.30-11.30 a.m., 6-7 p.m. }
இடம்: சாரையடி, புலோலி தெற்கு, புலோலி. (23323)

**BY: Mr.K. SIVA**

## இலவச ஆங்கில வகுப்பு

இன்று (05.10.2003) ஞாயிறு விஜயதசமி நாளில் யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி தரம் - 6 மாணவர்களுக்கு பழைய மாணவன் டாக்டர் ச.தேவேந்திரா ***(New york, U.S.A)*** அவர்களின் அனுசரணையுடன் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கும் **இலவச ஆங்கில வகுப்பு**

கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் அவர்களால் வகுப்பு ஆரம்பித்து வைக்கப்படும்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.

(23326)(13-16-31) பழைய மாணவர் மன்றம்.

## தேவை

எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடவசதிகளுடன் மாதாந்த ஊக்குவிப்புப் பணமாக **4000/=** வழங்கப்படும். தகுதியானவர்கள் தெரிவு செய்தல் இன்று காலை 9.00 மணிமுதல் 2.00 மணிவரை இடம்பெறும். நேரடியாக சமூகமளிக்கவும்.

*யசோ (பி.வி.ரி) லிட்,*
*35, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(23321)(13-16-31)

## இரு நாள்கள் யாழ். நகரில்!

மகளிருக்கான

FACIAL, மணப்பெண் அலங்காரம், கூந்தல் அலங்காரம்,
அழகுக் கலைவகுப்புகள்
கொழும்பின் பிரபல அழகுக்கலை நிபுணர்
**MRS. PREMA JEGAN**
(Diploma in beauty Culture India)

அவர்களால் எதிர்வரும் ஒக்ரோபர் 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலனைப்பெற இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு இல. : 0777-110383

*மேலும் விவரங்களை அடுத்து வரும் நாள்களில் உதயன் பத்திரிகை மூலம் அறிந்து கொள்ளுங்கள்.*

(23317) (26-16-17-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக நண்பன் **திரு.இ.பால்ராஜின்**
அன்புத் தந்தையார்
**ச.இரத்தினசபாபதி** அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம.

*திருநெல்வேலி.* (23330) (29-13-16-31) கல்லடி இளைஞர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 05 ★ 05 ★ 1942 — விண்ணில் 20 ★ 04 ★ 2002



**வேலுப்பிள்ளை அருமைத்துரை**

மண்ணில் 24 ★ 06 ★ 1942 — விண்ணில் 05 ★ 09 ★ 2003



**அருமைத்துரை தங்கத்திரவியம்**


குடும்பத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்த எம் - தந்தையே
ஆலமரம் போல எம்மை ஆதரித்த எம் - அன்னையே
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த எம் - பெற்றோரே
பொன்னான வாழ்வுதனைப் போற்றி வளர்த்து - மகிழ்ந்தவரே
புயல் வீசி சாய்ந்தது போல் சடுதியிலே - மறைந்தவரே
கூடிழந்த பறவைகளாய்த் தவிக்கின்றோம் - பிள்ளைகள் நாம்
தேடுகின்றோம் உங்கள் தயவை இனி எப்பிறவியில்
காண்போம் உங்கள் முகத்தை.

*194, மத்திய வீதி,*
*திருகோணமலை.* (C/30489) (15-19)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1924 ★ 03 ★ 17



உதிர்வு 2003 ★ 09 ★ 05

**செல்லையா றெனோல்ட் சற்குணசிங்கம்**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முடன்
வாழ்ந்திட்ட தந்தையே!
உங்கள் பிரிவை மறக்க முடியாது
தவிக்கின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'பூர்ணிமா'*
*தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.*
*0776 - 000361.*

(சி-30541) (31-13-16)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா ஆனந்தர்

**(பஞ்சவர்ணம் ரீச்சர் - இளைப்பாறிய தலைமை ஆசிரியர், அ.மி.த.க. பாடசாலை, இணுவில்)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய திருமதி இராசம்மா ஆனந்தர் நேற்று (04.10.2003) சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - கனகம்மா தம்பதிகளின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற மாணிக்கத்தியாகராஜா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர் மா.ஆனந்தரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் (வருமான வரித் திணைக்களம்) மற்றும் ஸ்ரீகாந்தன் (பொறியியலாளர், G.T.Z.-J.R.P.), கமலாசனி (இந்தியா), ஸ்ரீஞானகுரு (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), பத்மலோஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனோகரன் (லேஹ் ஹவுஸ், கொழும்பு), ஆனந்தக்குலேந்திரன் (லண்டன்), வத்சலா, மிதிலைச்செல்வி (தலைவர், சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக் கழகம்), கௌரி நகுலேஸ்வரி (ராணி, ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் சுரேந்திரன், விஜயபாலினி (இந்தியா), சியாமளபாலினி (இந்தியா), கிரீசன் (இந்தியா), திவாகர் (ஆஸ்திரேலியா), துஷானி (ஆஸ்திரேலியா), செந்தூரன் (லண்டன்), வாகசன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் சுந்தரலிங்கம், காலஞ்சென்றவர்களான அச்சலிங்கம், பரராஜசிங்கம், சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும் இராசமணி, பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.10.2003 புதன்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*இளந்தாரி கோயிலடி,*
*இணுவில், கிழக்கு,*
*இணுவில்.* (23322) (31-13-16)

தகவல் :
ஆ.ஸ்ரீகாந்தன் (மகன்)

## திருமதி செல்லையா அன்னம்மா

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா அன்னம்மா நேற்று (04.10.2003) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அருமை மனைவியும் அற்புதநாதன், நீலாவதி, இராசையா, சரஸ்வதி, தெய்வேந்திரம், செல்வராசா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.* (23327) (29-16-13-31)

தகவல்:
செ.தெய்வேந்திரம் (மகன்).

## இராமு சின்னத்துரை

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமு சின்னத்துரை அவர்கள் நேற்று (04.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை பார்வதியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இலங்கநாதன், குலசேகரம், ஞானசேகரம் சிவசுப்பிரமணியம், ஸ்ரீ சிவசாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஈஸ்வரன், சாரதாதேவி, மாலினி, சிவாநந்தினி, இராகினி ஆகியோரின் மாமனாரும் இரவீந்திரன், யமேலா, சயந்தன், சயந்தகுமார், உதயகுமார், இராஜ்குமார், அனுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிப. 1.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றர், உறவின்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (23329) (13-16-31)

தகவல்:
இலங்கநாதன் (மகன்)

# சிறுவர் அரங்கில் உளவியலின் பங்கை வலியுறுத்திய செயலமர்வு

'வளரும் பயிருக்கு முளையில் உதவுதல்' என்ற தலைப்பில் கடந்த 27ஆம், 28ஆம் திகதிகளில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் செயல்திறன் அரங்க இயக்கத்தால் நடத்தப்பட்ட சிறுவர் அரங்கு தொடர்பான செயலமர்வு பற்றிய ஒரு பார்வையை இந்தக் கட்டுரை தருகின்றது.

"வளரும் பயிரை முளையில் தெரியும்" என்ற ஆதார கருதியில் நின்று அப் பயிருக்கு முளையில் உதவும் செயற்பாடாக சிறுவர் தொடர்பான அரங்கு பற்றிய செயலமர்வு அமைக்கப்பட்டது.

நாளைய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களின் உருவாக்கம் ஆரோக்கியமாக அமைதல் அவசியமானதாகும். மேலை நாடுகளில் சிறுவர்கள் தொடர்பான செயல் ரீதியிலான பல முன்னெடுப்புக்கள் நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்றன. அவை உடல், உளம் எனும் இரு கூறுகளையும் உள்ளடக்கியவையாக திகழ்தல் கவனிக்கத்தக்கது.

ஆனால், கீழை நாடுகளில் இவ்வாறான செயற்பாடுகள் அரிதானதாகவே நிகழ்கின்றன. குறிப்பாக ஈழத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்றுவரும் கொடிய யுத்தம் எம்மை உலுப்பி எடுத்திருக்கின்றது. மரணமும், வறுமையும் அச்சமுமே எமது வாழ்க்கையாய் அமைந்தது. இவற்றால் வளர்ந்தவர்களே உடல், உளரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர் எனில் சிறுவர்களின் நிலை சொல்லில் அடங்காது.

இம்மனோநிலையை அறிந்து சிறுவர்களை இவற்றினின்றும் மீட்டெடுத்தல் மிக அவசியமான இன்றைய தேவையாகும். அந்தவகையில் 'சிறுவர் அரங்கு' அவதானத்திற்கு உரிய தொன்றாகிறது.

'குழந்தையும் தெய்வமும் ஒன்று' என்பார்கள். அது போல சிறுவர்கள் தூய உள்ளம் கொண்டவர்கள். ஒவ்வொரு நகர்வும், ஒவ்வொரு வார்த்தையும், அவர்களைப் பாதிக்கின்றது. கூர்மையான அவதானிப்பும் எதையும் ஏன்? எதற்கு? எனக் கேட்கும் மனோபாவமும் அவர்களிடம் இருக்கும். 'தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரைக்கும்' என்பது இவ்வாறே அமைந்தது எனலாம்.

அந்த வகையில் சிறுவருக்காக வழங்கப்படும் அரங்கு ஆனந்தத்தை நோக்காகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் யாவரையும் அதற்குள் ஈர்ப்பதாயும் அரங்கு முடிந்த பின்பும் கூட அச்சிறுவர்கள் அதனைப் போல நிகழ்த்திக்காட்டி ஆனந்தக் கூத்தாடவேண்டும் எனவும் பொதுவான கருத்து இக்கருத்தரங்கில் வெளிப்பட்டது; தெளிவாக உரைக்கப்பட்டது. சிறுவர்களை ஆரோக்கியமாக்க அவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்துவதும் அவர்களை மதித்து மதிப்பது போல நடத்துவதும் தவிர்க்க இயலாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

'சிறுவன்' என்பதை ஐ.நா.சபை பதினெட்டு வயதிற்கு உட்பட்டோர் என வரையறை செய்த போதும் இவ்வரங்கில் ஏறத்தாழ ஆறுவயதிற்கும் பதினொரு வயதிற்கும் (தரம் 1 முதல் தரம் 5 வரை) உட்பட்ட சிறார்களே - ஆரம்பப் பாடசாலை சிறுவர்களே - கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

சிறுவர்கள் உளரீதியாக வளர்க்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அன்றேல், நிகழக்கூடிய துர்நிலைப்பாடுகள் மற்றும் மனித மேம்பாடு ரீதியில் சிறுவர்களை வழிநடத்தல் அதற்காக அரங்கைப் பயன்படுத்தல் ஒழுக்கம் சார்ந்த பண்பியலைத் தெரியப்படுத்தல், இட்டுச் செல்லுதல் எனப் பலமுக்கிய விடயங்கள் இந்த சிறுவர் தொடர்பான செயலமர்வில் ஆராயப்பட்டுள்ளன.

சிறுவர் நாடகத்தின் எழுத்துருவானது உள்ளடக்கம், உருவம் என்ற ரீதியில் ஆராயப்பட்டது. மேலும் கதை, மொழி, அமைப்பு, பண்பு, உக்தி, ஒப்பனை, நேரம், பாத்திர சித்திரிப்பு, கருவி அளிக்கை போன்ற பல்வேறு தளங்களும் அதில் ஆராயப்பட்டது.

சிறுவர் அரங்க அளிக்கைகளில் - கதை என்கின்ற ஒன்று இருக்க வேண்டுமா? கதைப்பின்னல் எவ்வாறு அமைதல் வேண்டும்? அதன் கட்டமைப்பு எப்படியாக அமைதல் நன்று? கதைப் பொருள் எவற்றைக் கொண்டிருக்க வேண்டும்? பாத்திர அமைப்பு எப்படியானது? எழுத்துருவாக்கத்தில் ஒப்பனை, வேடஉடை, பற்றி எழுதுதல் வேண்டுமா? அறப்போதனை, உபதேசம் அவசியமா? எனப்பதினைந்து விடயங்களை சிறுவர் நாடக எழுத்துருவாக்கம் தொடர்பாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் முன்வைத்தார்கள்.

அவை பிற ஆய்வாளர்களின் ஆய்வுகளிலும் ஒரே அம்சமாகத் தொனித்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதேவேளை, அரங்க எழுத்துருவாக்கம் செய்பவரும் நெறியாள்கை செய்பவரும் இவற்றில் எவற்றை விட்டாலும் ஏற்றுக்கொள்ளலாம்; சிறுவர்களின் உள்ளத்தை அறிந்து எழுத்துருவாக்கம் / நெறியாள்கை செய்யாது விடின் அவ்வரங்கு பயனிலியாகவே அமையும் என்று அவர்கள் தெளிவு படுத்தினார்கள்.

கதை சார் அம்சத்தில் சமூக நடப்புக்கள், அனுபவங்களைக் கருவாக கொள்ளும் போது நல்லது கெட்டது எனும் இரு பண்புகள் வெளிப்படும். கெட்ட பண்பை சித்திரிக்கும் போது அது குழந்தையின் உள்ளத்தை சிக்கெனப் பிடித்திடின் அது தவறான விளைவைத் தந்துவிடும். கொடியகாட்சியை தவிர்த்தல், சிறுவனின் உள்ளத்தை பாதிக்காத வண்ணம் காட்சியை அமைத்தல் என்பன் இங்கு முக்கியமாகிறது.

எழுத்துருவைவிட இது அளிக்கைக்கே இன்னும் பொருத்தமானது. உதாரணமாக 'முயலார் முயல்கிறார்' சிறுவர் நாடகத்தில் சிங்கம் எளிமையாகவே கூறப்பட்டிருப்பினும் அதனைக் கொடூரமாக நிகழ்த்திக்காட்டிய போது சிறுவனொருவன் அழுததை க.இ.கமலநாதன் குறிப்பிட்டது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

முரணான கருத்து நிலைச் சித்திரிப்பு சிறுவர்களை குழப்பமூட்டும் என ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்ட போது கருத்துரையாளர் ஒருவர் அது பிரச்சினைக்குரிய விடயமல்ல என்றார். காகம் கறுப்பு என்பதே யதார்த்தமாக இருப்பினும் பல நிறக் காகங்களை அரங்கில் சிறுவர்கள் ஏற்றுக் கொள்வர் என்றார்.

சிறுவர் அரங்கு எளிமையானதாக சபையோரையும் இணைத்ததாக, சிறுவர் மனதில் பதியத்தக்க வகையில் திரும்பத் திரும்ப கூறுவதாக, கனதியான விஷயங்களை தவிர்த்து அவர்களுக்கு மகிழ்வைத் தருவதாக அமைவதன் அவசியம் அரங்கில் வலியுறுத்திக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் பார்வையாளனைத் தயார்ப்படுத்தல், பத்திரம் தன்னைத்தான் அறிமுகம் செய்தல் சிறுவர் விரும்பத்தக்க பாத்திரப் பெயர்கள் (எலிப்பம்மா, அணில் பிள்ளை) வினாவிடைப்பாங்கான எளிய உரையாடல்கள், சிறிய, சிறிய வசனங்கள், விரும்பி இசைக்கத்தக்க மெட்டில் (கிராமியம் சார்ந்தவை-எளிமை கொண்டவையான தன்மையில்) அமைந்த பாடல்கள் அவற்றிற்கேற்ற நடன அசைவுகள் என சிறுவர் அரங்கின் அம்சங்கள் நுணுகி ஆராயப்பட்டன.

சிறுவர் அரங்கு தொடர்பான சில முக்கிய பிரச்சினைகள் இந்த செயலமர்வில் முன்வைக்கப்பட்டன. சிறுவர்களுக்கிடையிலான 'நாடகப்போட்டி' தேவையானதா? ஒருவர் வெல்ல மற்ற யாவரும் தோல்வியடையும்போது பிஞ்சுமனம் சோர்ந்து போகாதா? இதனை நாடக விழாவாக நடத்தினால் என்ன? என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இப்போட்டியில் நடைபெறும் தவறுகள், பிரச்சினைகள் கூறப்பட்டன. கலைப் படைப்புகள் யாவற்றிற்குமே இது பொருத்தமான கேள்விதான். 'போட்டி' என்பது கேள்விக்குரியதே அதிலும் இப்போட்டிகள் சிறுவர்களின் உளவளர்ச்சிக்கு உதவாவிடினும், குன்றச் செய்யாமல் இருக்கவேண்டும். 'புலமைப்பரிசில் பரீட்சையை நிறுத்தினால் என்ன' என டாக்டர் தயா சோமசுந்தரமவர்கள் கூறியதாக கூறப்பட்ட கூற்றும் இங்கு கவனிக்கத்தக்கதே.

ஏனெனில், இப்போட்டிகள் உண்மையில் சிறுவர்களுக்கிடையிலானது அல்ல. பெற்றோர்களுக்கிடையிலானது, ஆசிரியர்களுக்கிடையிலானது, அதிபர்களுக்கிடையிலானது. போலித்தனமான வரண்ட கௌரவங்களுக்கிடையிலானது. அகசிறுவர்களுக்கு இடையிலான போட்டி வைத்தல் என்பது நீண்ட ஆய்வுக்குரிய அம்சமே. அதிபரும், ஆசிரியரும், பெற்றோரும் தம் போலித்தனங்களை உதறி சிறுவர் நலனில் கவனம் கொள்ளும்போதே இது சாத்தியமானது என்பது வெள்ளிடை.

ஆரோக்கியமான குழுக் கலந்துரையாடல்கள், அவற்றினூடாக எழுத்துரு, அளிக்கை, உள்ளடக்கம், அறிவுசார் செயற்திறன்கள், விழிப்புணர்வு எனும் தளத்திலமைந்த இறுதிக்கருத்துரைகள் பாராட்டிற்கும் ஆராய்விற்கும் உரியவை. உண்மையில் அறிவுசார் தளத்தில் விஞ்ஞான பூர்வமான மேம்படுத்த தங்குதிறன் உள்ள வளம்சார் அணி உருவாக்கப்படுதலும் சிறுவர் தொடர்பான அம்சங்கள் சார்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்தலும் வேண்டும் எனும் கருத்துரைகள் கவனத்திற்குரியவை.

வழமையான செயலமர்வுகள் போல சில வளவளப்புகள் இருப்பினும், வருகை தந்த ஆய்வாளர்கள் யாவரும் தமக்குரிய தலைப்புக்குரிய ஆயத்தங்களோடு வருகை தந்து தமது கடமைகளை செம்மையாகச் செய்தமையும் கலந்துரையாடல் குறுகிய நேரமேயாயினும் சிறப்பாய் அமைந்தமையும் குறிப்பிடத்தக்க விடயங்கள் ஆகும்.

இந்த வகையில் செயற்திறன் அரங்க இயக்கமும் செயற்பாட்டாளர்களும் பாராட்டிற்கு உரியவர்கள். இவ்வாறான இன்னும் பல முன்னெடுப்புகள் இவ்வியக்கம் செய்ய வேண்டும்.

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும்

# உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு நடத்திய எழுத்தாக்கத்திறன் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக்.5

உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து வடக்கு - கிழக்கு, மலையக பள்ளிகளுக்கிடையே நடத்திய, தமிழ்மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு முடிவுகள் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் ஆகக்கூடிய மதிப்பெண்ணைப் பெற்ற முதல் மூவருக்கும் தலா ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. அடுத்த நிலையில் உள்ள இருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

உலக ஆசிரியர் நாளான ஒக்ரோபர் 6ஆம் திகதி பரிசும், சான்றிதழும் பெறத்தக்கதாக குறித்த கல்வி வலயங்களுக்கு இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தேசிய நிலையிலும் வலய நிலையிலும் பரிசு பெறுபவர்களினதும், சான்றிதழ் பெறுபவர்களினதும் விவரம் வருமாறு:-

**தேசிய மட்டம்**

முதலாம் இடம்:- பி. யோகராசா (சம்மாந்துறை, இரணைமடு இந்து ம.வி), இரண்டாம் இடம்: செல்வி கா.ஜெகதீஸ்வரி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சி. விசுவாசம் (பூநகரி ம.வி), நான்காம் இடம்:- திருமதி க. சிறீதரன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), செல்வி ஜீவரஞ்சினி சின்னத்தம்பி (வட்டக்கச்சி ம.வி)

வலயமட்ட முடிவுகள் வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

சுந்தரம் வைகுந்தநாதன் (புனிதபத்திரிசியார் கல்லூரி), விஸ்வதேவி புஸ்பநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), நாகேந்திரன் புவனேந்திரன் (யாழ். மத்திய கல்லூரி), சத்திய பவானி செபமாலைதாஸ் (பெரியபுலம் ம.வி.), மயிலுரங்கநாதன் (ஆவரங்கால் ராமகிருஷ்ணா ம.வி).

**வலிகாமம்**

கா.சசிதரன் (அருணோதயாக் கல்லூரி), பூதன் ஜெயமலர் (விக்டோரியா கல்லூரி), த.தயானந்தன் (இளவாலை மெய்கண்டான் ம.வி.), சு.சிறீக்குமரன் (ஏழாலை, சிறிமுருகன் ம.வி.), மகாலிங்கசிவம் கலைவாணி (இராமநாதன் கல்லூரி).

**வடமராட்சி**

து.ஜெயதேவன் (வெற்றிலைக்கேணி ம.வி), து. அருந்தவசீலன் (அம்பன் அமி.த.க.பா.), கி. தருமலிங்கம் (ஞானசாரியர் கல்லூரி), ஆ.கந்தசாமி (நாகர் கோவில் ம.வி.), த. முரளிதரன் (உடுப்பிட்டி).

**தென்மராட்சி**

ம. மகேசன் (வீரசிங்கம் ம.வி), வி. மகேந்திரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அருணாசலம் மனோரஞ்சிதன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), க. ஈஸ்வரன் (மீசாலை வீரசிங்க ம.வி.), சந்திரதேவன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சு.சிறீதரன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**தீவகம்**

பங்கயற்செல்வி யோகநாதன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), அமிர்தேஸ்வரசர்மா மனோகரன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), ஆனந்த கௌரி குமாரதாசன் (சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.), நடராஜா கணேசமூர்த்தி (கலாநிதி ஆதியாகராசா ம.ம.வி.), சுமதி சுரேந்திரன் (சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.).

**கிளிநொச்சி**

அருளாம்பிகை அருளம்பலம் (மத்திய கல்லூரி), தமிழ்ச்செல்வி கந்தசாமி (அழகாபுரிமவி), இரஞ்சிதமலர் அருணா (இந்துக் கல்லூரி), வளர்மதி செல்வராசா (பரந்தன் அ.த.க.பா), செல்வநாயகி இராஜரட்ணம் (தர்மபுரம் ம.வி.).

**முல்லைத்தீவு**

த.மேரிசுகி (முல்லைத்தீவு ம.வி.), பநாகநளினி (விஸ்வமடு ம.வி.), சி.குணபாலன் (தேவிபுரம் அ.த.க.பா), தயா அரசரட்ணம் (விஸ்வமடு ம.வி).

(ம-6-12)


## துயர் பகிர்கிறோம்



எமது சக மாணவியான
செல்வி அ. கார்த்திகா
அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வருட முகாமைத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(23331)(13-17-31)

## தேவை

பூக்கன்று பராமரிக்க, விற்பனை செய்ய, சீமெந்து சாடிகள் செய்ய வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை. ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும். சம்பள விவரம் நேரில் (சாடி தொழில் பழக விரும்புபவர்களும் வரலாம்).
தொடர்பு: கிறீன் பார்க்,
152/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 222 6563. (23305) (25)

## ராஜா யாழ்ப்பாணம்

குதூகல ஆரம்பம்
பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்



காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## நிலாஞ்சனாஸ்

மாதவன், சிநேகா நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
STRATEGIC COMMAND


## தவறிவிட்டது

சண்முகநாதன் சத்தியநாதன் என்பவருடைய தே.அ.அ. இல. (720944138V) நேற்று ராஜா தியேட்டருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.
அர்ச்சுனா நூலகம்,
இல.521, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.077-7111380.
(23328) (29-13-16-31)

## லஷ்சுமி சினிமா இணுவில்

விக்ரம், ஜோதிகா, ரீமாசென் மற்றும் பலர் நடித்த
தூள்
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பு.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்



விக்ரம், திரிஷா, விவேக் மற்றும் பலர் நடிப்பில்
சாமி
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)



# பொதுமக்கள் மீதான தாக்குதல் காட்டுமிராண்டித்தனமான ஒன்று

## மாவை சேனாதிராஜா எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ். பிரதான வீதியில் கன்னியர் மடத்தடி மற்றும் கோண்டாவில் பகுதிகளில் மக்கள் மீது படையினரும் பொலீஸாரும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏவி தாக்குதல் நடத்தியமை காட்டுமிராண்டித்தனமானதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

யாழ். மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்ததும் போக்குவரத்துக்கள் நிறைந்ததுமான இடங்களில் வீதித் தடைகளையும் காவலரண்களையும் இராணுவத்தினர் நிறுவியுள்ளமையே விபத்துக்கள் இடம்பெறக் காரணம். இந்த வகையிலேயே நேற்றுமுன்தினம் இராணுவ ட்ரக் மோதி இருவர் கொல்லப்பட்டனர்.

சமாதான காலத்திலேனும், இராணுவத்தினர் இத்தகைய சனநெரிசல் மிக்க இடங்களில் அமைத்துள்ள தமது காவலரண்களையும் சோதனைச் சாவடிகளையும் அகற்றி மக்களின் சாதாரண வாழ்வுக்கு இடைஞ்சல் இல்லாது இருக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையிலும், சாதாரணமாக பொலீஸார் சிவில் கடமையில் ஈடுபடக்கூடியதாக இருக்கும் சூழ்நிலையிலும் இராணுவத்தினர் இப்பகுதியில் உள்ள மக்களைத் தாக்கியுள்ளமை முழுமையான போர்நிறுத்த மீறலாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவினர் இவ்விருவிடயங்களையிட்டும் கூடிய கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் பாரபட்சமற்ற முறையில் இராணுவத்தினரின் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் சம்பந்தமான விசாரணையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் அவர்.

பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இந்த சம்பவம் குறித்து எடுத்துக் கூறியதாகவும் -

கொழும்பு திரும்பியதும் நேரில் அவர்களைச் சந்தித்து இது விடயமாகப் பேசவிருப்பதாகவும் - சேனாதிராஜா மேலும் தெரிவித்தார். (ம-3-86)

# இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல்களையும் மற்றும் குறித்த மோட்டார் சைக்கிளையும் இராணுவமும், பொலீஸாரும் கூட்டாக மக்களை அச்சுறுத்தி அகற்ற முற்பட்டுள்ளனர். மக்களது எதிர்ப்புக்கு மத்தியிலும் இத்தடயங்களை அகற்ற முற்பட்டமையானது பாதிக்கப்பட்ட மக்களிடம் எதிர்ப்பினை உருவாக்கியது. மக்களும் இயல்பாகவே தமது எதிர்ப்பைக் காட்டினர்.

இராணுவமும் பொலீஸாரும் மக்களைத் தாக்கியமையும் கண்ணீர்க் குண்டுகளை வீசி மக்களை துரத்த முற்பட்டமையும் மக்களுக்கு ஆத்திரமூட்டின. சட்டத்தையும், ஒழுங்கையும் பேணவேண்டிய பொலீஸாரே தடயங்களை அகற்ற முற்பட்டமை மக்களுக்கு சினமூட்டுவதாக அமைந்தது.

மக்களை சீண்டி விட்டு பரவலான எதிர்ப்பை உருவாக்கிய பொலீஸாரும, படையினரும் தொடர்ந்தும் அடாவடித்தன செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

வேட்டுகளைத் தீர்ப்பதன் மூலமும் கண்ணீர்க் குண்டுகளை வீசுவதன் மூலமும் தடியடிப்பிரயோகத்தில் ஈடுபடுவதன் மூலமும் அவர்கள தமது செயலைத் தொடர்ந்தனர்.

நீண்டநேரத்தின்பின் அங்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் நிலைமைகள் கட்டுமீறிச் செல்வதை அறிந்து யாழ் மாவட்ட அரசியல்துறையினரை உதவுமாறு கேட்டுக்கொண்டனர். அவர்கள் சம்பவம் நடந்த இடத்துக்கு 75 மீற்றருக்கு அப்பால் நின்று யாழ். நகர பிரிகேட் கட்டளை அதிகாரியுடனும், பொலீஸ் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

அரசியல்துறையினர் மக்களை நேரடியாகச் சந்தித்து பதற்றத்தைத் தணிப்பதற்குச் சென்றபோது இராணுவ அதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும், கண்காணிப்புக்குழுவினரும் பார்த்திருக்கக்கூடியதாகவே இராணுவத்தினர் அரசியல்துறைப் போராளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள்.

இது ஒரு கோழைத்தனமான அராஜக செயற்பாடு என்பதையும், மக்களை மேலும் ஆத்திரமூட்டுவதாக அமைந்துள்ளது என்பதையும அரசியல்துறையினரின் அமைதி பேணும் நடவடிக்கையை தடுக்கும் முறையிலான கொலைமுயற்சியே என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அததுடன் கடந்த காலங்களிலும் இராணுவ வாகனங்களினால் பொது மக்கள் பலி எடுக்கப்பட்டமையும் காயப்படுததப்பட்டமையும் தொடர்நிகழ்வாக உள்ளது. இதற்கான விசாரணை நடவடிக்கையை கண்துடைப்பாகவே கரிசனை இன்றி பொலீஸ் அதிகாரிகள் மேற்கொள்கின்றனர். இதுவும் மக்கள் ஆத்திரப்படுவதற்கு முக்கியகாரணம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேண வேண்டிய பொலீஸாரும் இத்தகைய வன்முறைகளுக்குத் துணைபோவது கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டியது. அது ஒரு மனிதநேயவிரோதச் செயற்பாடுமாகும்.

அத்துடன், போர்நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சமாகிய மக்களுக்கு இன்னல் விளைவிக்காது இருத்தல் என்பதை இதன்மூலம் இராணுவம் அப்பட்டமாக மீறியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மக்கள் காட்டும் எதிர்ப்பு நடவடிக்கைகளை பொலீஸாரும், இராணுவத்தினரும், மக்க் கொடூரமான முறையில் அடகக முயன்று வருகின்றனர். வேண்டும் என்றே திட்டமிட்டப்பட்டு, சமாதான செயற்பாடுகளை ஏதோ வகையில் குழப்பும் தன்மையை இச்செயற்பாடுகள வெளிப்படுத்துகின்றன. எனவே அடாவடித்தனத்தில் ஈடுபடுத்தப்படுவதற்காக குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரும் பொலீஸாரும் உடன் விலக்கிக்கொள்ளப்படுவது அமைதி பேணுவதற்கான அவசிய செயற்பாடாகும் - இபபடி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி வலியுறுத்திக் கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதித்தலைவர் உடனடியாக இதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார் - என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## பாதுகாப்பு அமைச்சு செயலர் ஒஸ்ரின் சம்பவம் பற்றி விசாரித்தார்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ். பிரதான வீதி மற்றும் கோண்டாவில் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனுடன் தொடர்புகொண்டுள்ளார்.

வீதி மறிப்புப் போராட்டம் காரணமாக மோசமான நிலை ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதால் நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து சுமுக நிலை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஒஸ்ரின் பெர்னாண்டோ அரச அதிபரிடம் கேட்டிருந்தார்.

அதையடுத்து, அரச அதிபர் சம்பவ இடத்துக்குச் சென்று படை அதிகாரிகளுடன் பேசினார்.

அரச அதிபர் அங்கு சென்ற சமயம் படையினர், சிலரை அங்கு தடுத்து வைத்திருந்தனர். அரச அதிபரின் தலையீட்டை அடுத்து அனைவரும் உடன் விடுவிக்கப்பட்டனர். (ம-3)

# சடலங்களையோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துச் செல்ல முடியும்.

இந்தச் சம்பவத்தில் அந்த நடைமுறை முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. சம்பவ இடத்துக்கு நான வருவதற்கு முன்பே சடலங்களும் சம்பந்தப்பட்ட ட்ரக் மற்றும் மோட்டார் சைக்கிளும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இவை அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் எப்படி முறையான விசாரணையை நடத்த முடியும்.

எதிர்காலத்தில் இந்த நடைமுறையை இராணுவத்தினரும் இராணுவப் பொலீஸாரும் ஒழுங்காகச் செயற்படுத்தவேண்டும்.

- இப்படி நீதிவான் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு நேற்றுக் காலை சென்ற நீதிவான் சம்பவ இடத்தின் வரைபடங்களைப் பெற்றதுடன் சில தடயப் பொருள்களையும் சேகரித்துள்ளார்.

இதன் பின்னர் தமது பங்களாவில் மரணவிசாரணைகளை நடத்தி சாட்சியங்களைப் பதிவு செய்தார்.

உயிரிழந்தவர்களுக்கு ஏற்பட்டது விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்த நீதிவான் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு பூரண அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி இராணுவ பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட ட்ரக்கின் சாரதியான கோப்ரல் காமினி திஸநாயக்கவை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சடலங்களை தகனம் செய்ய அனுமதிக்கும்படி விடுத்த கோரிக்கையை நீதிவான் ஏற்று அதற்கான உத்தரவையும் பிறப்பித்தார். (ம-3)

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு

முல்லைத்தீவு,ஒக்.5

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆசிரியர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கும் மாலை 5 மணிக்கு ஆசிரியர் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (எ-4)

# பொலீஸார், இராணுவத்தினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களைக் கலைந்து போக வைக்கும் முயற்சியில் இராணுவத்தினரும் பொலீஸாரும் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பின்னர் அது களேபரமாக மாறியது.

பொலீஸார் மற்றும் இராணுவத்தினர் மீது பொதுமக்கள் கற்களையும் தயாராக வைத்திருந்த போத்தல்களையும் வீசித் தாக்கினர்.

சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த பொலீஸாரும் இராணுவத்தினரும் உடனடியாக பதில் தாக்குதலில் இறங்கினர். சரமாரியாக கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. பொது மக்கள் மீது இராணுவத்தினரும் கற்களை வீசினர்.

இதனால் கலைந்து ஓடிய பொது மக்களை அவர்கள் விரட்டி விரட்டித் தாக்கினர். ஓடும்போது பொதுமக்களால் கைவிடப்பட்ட சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன இராணுவத்தினராலும் பொலீஸாராலும் அடித்துநொறுக்கப்பட்டன.

பிரதான வீதி வழியாக பொதுமக்களை விரட்டிச் சென்ற பொலீஸாரும் இராணுவத்தினரும் பின்னர் பிரதான வீதியை விட்டு விலகி நகர்களின் உட்புற வீதிகள் வழியே சென்று அங்கிருந்தவர்களைத் தாக்க ஆரம்பித்தனர்.

மவுண்காமல் வீதி, சென்பற்றிக்ஸ் வீதி, டேவிட் வீதி, ராஜேந்திரம் வீதி ஆகிய நகர உட்புற வீதிகளில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரும் பொலீஸாரும் மறியல்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தவிர அந்த வீதிகளின் வழியே வந்தவர்கள், வீடுகளில் இருந்தவர்கள் என்று அனைவரையும கண்மூடித்தனமாகத் தாக்கினர். உட்புற வீதிகள் வழியாக அவர்கள் குருநகர் வரை தமது தாக்குதலை விரிவுபடுத்தியிருந்தனர்.

அப்பகுதி வீடுகளில் இருந்தவர்கள் எவரும் வெளியே வரவில்லை. அவர்கள் வெளியே வர படையினர் அனுமதிக்கவுமில்லை.

நேற்றிரவு அந்தப் பகுதிகளில் மக்கள் நடமாட்டத்துக்கும் படையினர் தடைவிதித்தனர். அங்கு தொடர்ந்தும் பதற்றம் நீடிக்கிறது.

இதேபோன்று, கோண்டாவில் பகுதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதும் பொலீஸாரும் இராணுவத்தினரும் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன் கண்மூடித்தனமான தாக்குதலையும் நடத்தினர்.

மிகத் திட்டமிட்ட வகையில் போதிய தயார்ப்படுத்தல்களுடன் படையினரும் பொலீஸாரும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

இந்தத் தாக்குதல்களில் 8 பேர் காயமடைந்தனர்.

மடத்தடியில் இடம்பெற்ற களேபரத்தில் ரப்பர் குண்டு துப்பாக்கிச் சூட்டில் எஸ்.பூங்கரன் (வயது 20 - யாழ்ப்பாணம்), துப்பாக்கியால் தாக்கப்பட்டு காயமடைந்த அருமைநாயகம் ரதீஸ்கரன் (வயது 22 - சுண்டிக்குழி), கோண்டாவிலில் ரப்பர் குண்டு துப்பாக்கிச் சூட்டில் சிக்கி காயமடைந்த கே.தஜீபன் (வயது28 - கோண்டாவில் வடக்கு) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலில் காயமடைந்த தி.உதயகுமார் (வயது 27), வ.சந்திரசேகரம் (வயது48), ஜெ.விரகாஸ் (வயது 18), த.தஜீதரன் (வயது19), யூட்சன் (வயது 26) ஆகியோர் அங்குள்ள மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

*(கோண்டாவில் மற்றும் மடத்தடிச் சந்திப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த விரிவான செய்திகளும் படங்களும் 3ஆம் பக்கத்தில்.)*

(ம-3-4-6-8-ரி-15-86-88-49-51)

# மற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது

அண்மையில் திருமணம் செய்த இவர் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் வசித்து வந்தார்.

சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் சிற்றூழியர்களாகப் பணிபுரியும் ம.லிங்கரூபனும் அவருடன் பணிபுரியும் ராஜ்குமாரும் வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டதாகவும்-

ராஜ்குமாரை பஸ் நிலையத்தில் விடுவதற்காக வந்துகொண்டிருந்த சமயமே விபத்து ஏற்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ம-3-15-88)




STUDY & WORK IN UK

Queenspark College, London

Programmes offered from Diploma, through BBA & BSc to Post Graduate level including MBA, MSc and PhD, in the following areas:

Law, Business Studies
Information Technology,
Travel Tourism & Hospitality

Queens Park College offers:-

- High quality teaching • Courses accredited by UK universities and other internationally recognised accreditation bodies • Excellent location in Central London • Superb new facilities • Free internet access • Airport pick up and Accommodation provided where required • Job search assistance • Bank accounts opened • Student counselling

Complete Visa Assistance Provided

Overseas students are legally allowed to work for a maximum of 20hrs per week during term time

Authorised Counselling Centre:
Soft View Computer College
43, Arasady Road, Thaddatheru Junction,
Jaffna, Srilanka.
Tel/Fax:021-2225170 Mobile:077-6093477
Email: srilanka@studiesabroad.net

For more details visit: http://www.queensparkcollege.com

## தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு காசாளர், உதவியாளர்கள் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த. உயர்தரத்துடன் கணனிசார் அறிவு விரும்பத்தக்கது.

மூர்த்தி ஸ்ருடியோ
அன் கலர் லாப்,
மானிப்பாய்.
T.P.: 021-222 2884

(C/30532) (13-16)

## வேலையாள் தேவை

மருந்தக வேலையில் முன் அனுபவமுள்ள வேலையாள் தேவை. யாழ் நகரை அண்டிய பகுதியில் வசிக்கும் ஆண்,பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

இன்று (05.10.03) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நேரில் வரவும்.

திருபாமசி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(23295) (13-16)

## இன்றைய வீடியோ CD வெளியீடு

ரகசியமாய்

விஸ்ணு வீடியோ,
கோண்டாவில்.

(C/30530) (13-16)

"அடுத்தவன் வலி, அடுத்தவன் பசி, அடுத்தவன் தவிப்பு
எப்போது, உன்னுடையதாய் உனக்குள்
வேதனையைக் கிளப்புகிறதோ
அப்போதே நீ மனிதப் பிறவி"
- சத்ய சாயி பாபா -

அரும்புகள் சிறுவர் நிதியம்

வசதி குறைந்த சிறுவர்களின்
மேலதிக சிகிச்சைக்கு உதவுங்கள்

- யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்,
☎ 021-222-2134, 0777-678051.

(C/30512) (13-16)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.